Registered as a Newspaper பக்கங்கள் 8

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளைநூலகம்.

விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

## பட்டதாரி பயிலுனர் ஆசிரியர்களை நியமிப்பதற்கு தடைவிதிப்பு

பயிலுனர் ஆசிரியர்களாக பட்டதாரிகளை நியமிப்பதற்கு கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரன தடைவிதிப்பதென முடிவுசெய்துள்ளார். பட்டதாரி பயிலுனர் ஆசிரிய சங்கப் பிரதிநிதிகளுடன் தனது அமைச்சில் நடத்திய மாநாடு ஒன்றிலேயே அமைச்சர் இம் முடிவை எடுத்துள்ளார். பட்டதாரிகள் பயிலுனர்களாக தெரிவாவதால் தமக்கு கிடைக்கவேண்டிய அரச ஊழியருக்கான பல மேலதிகப்படிகள், சலுகைகள் கிடைப்பதில்லை என அவ்வாசிரியப் பிரதிநிதிகள் அமைச்சரிடம் (7ஆம் பக்கம் பார்க்க)

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 புரட்டாதி 02 18-09-94 ஞாயிற்றுக்கிழமை ஓசை 212

# பூநகரிப்பாதையை திறந்துவிட ராணுவம் ஒருபோதும் ஒப்புக்கொள்ள மாட்டாது!

## வெளியேறவேண்டி வராது எனவும் நம்பிக்கை

(கொழும்பு)

பூநகரி இராணுவ முகாமை விட்டு வெளியேறும் எந்தவொரு நடவடிக்கைக்கும் எதிராகவே ஆயுதப்படையினரும் அதிகாரிகளும் இருப்பார்கள் என்றும், இதேவேளை அப்பகுதியைவிட்டு வெளியேற வேண்டி நேராது எனப் பாதுகாப்பு அதிகாரிகள் நம்புகின்றனர் எனவும், கொழும்பிலிருந்து வெளிவரும் ஐலண்ட் நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து மேலும் அச் செய்தியில் பூநகரி இராணுவ முகாமைமூடிவிடும்படி பொதுஜன ஐக்கியமுன்னணி அரசாங்கத்தை விடுதலைப் புலிகள் இயக்கம் கோரிவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் கேரதீவு-சங்குப்பிட்டி பாதையை பயன்படுத்துவதற்கு தடையாக இருப்பது பூநகரி முகாம் மட்டுமே. இதுபற்றிக் கருத்து தெரிவித்துள்ள இராணுவ அதிகாரிகள் தாம் பூநகரியை தக்க வைத்திருப்பதா அல்லது கைவிடுவதா என்பதுபற்றி, இதுவரையில் பரிசீலனை செய்யவில்லை என்றார்கள். அத்துடன் பூநகரியை விட்டு இராணுவம் வெளியேறினால் அது விடுதலைப் புலிகளுக்கு பெரும் பயனளிக்கும் எனவும் தெரிவித்தனர்.

நாற்றுக்கும் மேற்பட்ட இராணுவத்தினரையும், இருநூற்று எழுபத்தைந்துக்கும் மேற்பட்ட கடற்படையினரையும் பலி எடுக்கும் அளவுக்கு ஒரு பெரிய தாக்குதலை விடுதலைப் புலிகள் நாகதேவன்துறை மீது நடத்தியதற்கு காரணம், அவர்கள் யுத்த தந்திர ரீதியாக அப்பாதையின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொண்டமையே ஆகும் எனவும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

## தமிழருக்கு மகத்தான சேவை புரிந்த வைத்திய கலாநிதி பொன்னம்பலம்


### விடுதலைப் புலிகள் அரசியற்துறை இரங்கல்

பிரபல சத்திர சிகிச்சை நிபுணரும், சேவைமனப்பான்மை கொண்ட மருத்துவருமான வைத்தியகலாநிதி பொன்னம்பலம் அவர்கள் நேற்று முன்தினம் கொழும்பில் இயற்கை எய்திய செய்தி தமிழ் மக்களைச் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

1976 ஆம் ஆண்டு தைமாதத்தில் யாழ் மருத்துவமனைக்கு மாற்றலாகி வந்து, சேவையாற்றத் தொடங்கிய அவர், இவ்வாண்டின் முற்பகுதியில் சுகவீனம் காரணமாக கொழும்பு செல்லும் வரை தொடர்ச்சியாக 18 ஆண்டுகள் தமிழ் மக்களுக்கு மருத்துவ சேவை புரிந்துள்ளார்.

நெருக்கடியான கால கட்டங்களிலெல்லாம், யாழ். மருத்துவமனையிலேயே தங்கியபடி மக்களுக்கும் போராளிகளுக்கும் அவர் ஆற்றிய மருத்துவசேவை போற்றுதற்குரியது. இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல்துறை ... மை புரிந்திருந்தார்.

அதேபோல ''இரண்டாவது ஈழப்போர்'' தொடங்கிய வேளையில், வைத்தியர்கள் இல்லாது யாழ் மரு (7ஆம் பக்கம் பார்க்க)



## ரோந்து சென்ற ராணுவம் மீது புல்மோட்டையில் தாக்குதல்

### 2 படையினர் பலி; ஆயுதங்கள் மீட்பு

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் சிறிலங்கா இராணுவத்தினர்மீது புலிகள் நடத்திய தாக்குதலில் இரண்டு சிறிலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் அவர்களிடமிருந்து ஆயுதங்களும் மீட்கப்பட்டன.

அதிகாலை 5. 30 மணியளவில் புல்மோட்டை 10-ம் கட்டைக்கும் 7-ம் கட்டைக்கும் இடையில் வைத்து ரோந்துசென்று கொண்டிரு (8ஆம் பக்கம் பார்க்க)

## லண்டன் பயணம்

(யாழ்ப்பாணம்)

## பொ. ஐ. மு. வேட்பாளர் குறித்து

ளிகளுக்கும் அவர் ஆற்றிய மருத்துவசேவை போற்றுதற்குரியது. இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் துறையினர் விடுத்த இரங்கற் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அச்செய்தியில்; இந்தியப் படைகளினால் யாழ்ப்பாணம் முற்றுகையிடப்பட்டு யாழ். வைத்தியசாலைப் படுகொலை நடைபெற்றவேளைகளிலெல்லாம் தன்னுயிரைக் கூட பொருட்படுத்தாது தொடர்ச்சியாக யாழ். மருத்துவமனையிலேயே சட



வைத்திய கலாநிதி ச. பொன்னம்பலம்

பயணம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கைச் சேர்ந்த 14 பிரதிநிதிகள் அடங்கிய மருத்துவர் குழு லண்டன் பயணமானது என கொழும்பு தகவல்கள் தெரிவித்தன.

வடக்கு-கிழக்கு மக்களின் சுகாதார மற்றும் வைத்திய தேவைகளை ஆராய்ந்து இவைகளைத் தீர்ப்பதற்கும் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அளிக்கவேண்டிய நிவாரணங்கள் குறித்தும்

(8ஆம் பக்கம் பார்க்க)

# நவம். 9-ல் ஜனாதிபதித் தேர்தல்; தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் நவம்பர் 9ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும். தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் அடுத்தமாதம் ஒக்டோபர் 7ஆம் திகதி ஏற்றுக்கொள்ளப்படும் என தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

தேர்தல் செயலகத்தில் வைத்து நியமனப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். ஆட்சேபனை தெரிவிக்க மேலதிகமாக அரைமணி நேரம் வழங்கப்படும்.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளை சார்ந்த வேட்பாளர்கள் தவிர்ந்த ஏனையோர் எம்.பிகளாக அல்லது முன்னாள் எம். பிகளாக இருக்க வேண்டும் என தேர்தல் ஆணையாளர் அலுவலகம் அறிவித்துள்ளது. இதனை உறுதிப்படுத்தும் வகையில் பாராளுமன்ற செயலாளர் நாயகத்திடம் இருந்து பெற்ற சான்றுப்பத்திரம் ஒன்றை இத்தகைய வேட்பாளர்கள் சமர்ப்பித்தாலே அவர்களிடமிருந்து கட்டுப்பணம் பெற்றுக்கொள்ளப்படும்.

ஜனாதிபதி தேர்தல் வாக்களிப்பு 9579 வாக்கு சாவடிகளில் நடைபெறும். ஒரு கோடி ஒன்பது லட்சம் பேர் வாக்களிக்க தகுதிபெற்றுள்ளனர். இந்த ஜனாதிபதி தேர்

(8ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தலில் ஐ.தே.க. வெற்றிபெற்றால் ஜனாதிபதி முறையே தொடரும்

### ஐ. தே. க. செயலாளர் தெரிவிப்பு

ஜனாதிபதி தேர்தலில் ஐ. தே. க. வெற்றி பெற்றால் ஜனாதிபதி ஆட்சி முறை தொடர்ந்து அமுலில் இருக்கும். அது ஒழிக்கப்படமாட்டாது என ஐ.தே.க. பொதுச் செயலாளர் காமினி விஜேசேகர பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

இந்த ஜனாதிபதி தேர்தலுக்கு முன்பாக ஜனாதிபதி முறையை ஒழிக்குமாறு நாம் புதிய பொதுஜன ஐக்கிய முன்னணி அரசைக் கோரினோம் ஆனால் அவர்கள் ஜனாதிபதி தேர்தலை நடத்திய பின்பே அதை ஒழிக்க முடியும் என்றனர். இதற்கு என்ன காரணம் என்பதை அறிய முடியவில்லை. நாம் ஜனாதிபதி முறையை, வெற்றிபெற்றால் தொடர்ந்து அமுல் செய்வோம். எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஜனாதிபதி முறையே குறிப்பாக சிறுபான்மையினரைப் பொறுத்தவரையில் சிறப்பானது என்று குறிப்பிட்டுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

## புதிய ஜனாதிபதி ஜனவரியில் பதவி ஏற்பார்

(கொழும்பு)

நவம்பர் 9 இல் நடைபெறும் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறும் வேட்பாளர் ஜனவரி மாதத்திலேயே பதவி ஏற்பார் அதுவரையில் தற்காலிக ஜனாதிபதியாக டி. பி. விஜேதுங்காவே தொடர்ந்தும் பதவி வகிப்பார் என தெரிவிக்கப்படுகிறது.

**தியாகி திலீபன் உருவப்படம் உள்ளே**

லெப். கேணல் திலீபனின் உருவப்படம் இன்றைய ஈழநாதம் தினசரியுடன் இணைப்பாக வெளிவருகிறது

# போ. ஐ. மு. வேட்பாளர் குறித்து தீர்மானம் எடுக்கப்படவில்லை

(கொழும்பு)

நவம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தனது ஜனாதிபதி வேட்பாளராக காமினி திசாநாயக்காவை நிறுத்தப் போவதாகவும் இதில் எந்தவித மாற்றமும் இல்லை எனவும் ஐ. தே. க. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஆனால் பொது ஜன ஐக்கிய முன்னணி தனது ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது குறித்து தெளிவான முடிவை எடுக்கவில்லை என்றும் இக் கட்சியில் சேர்ந்துள்ள சில கட்சிகள் பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட வேண்டும் என வற்புறுத்தி வருவதாகவும், மேலும் சிலர் சிறிமாவோ பண்டாரநாயக்கா போட்டியிடவேண்டும் என்று விரும்புவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை ஜே.வி.பியும் பியாசிரீலி பெரமுனையும் இணைந்து முற்போக்கு முன்னணி என்ற அமைப்பின் கீழ் போட்டியிடுவது என்பது உறுதியாகி விட்டது எனவும், ஆனால் யார் அதன் வேட்பாளர் என்பது குறித்து அடுத்த வாரம் முடிவு எடுக்கப் போவதாகவும் இதன் தலைவர் ஆரிய பொலே கொட தெரிவித்துள்ளார்.

## தொண்டாவுடன் பேச ஐ. தே .க. திட்டம்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு தொண்டமானின் இலங்கை தொழிலாளர் காங்கிரசுடன் பேச்சுவார்த்தை நடத்த ஐக்கிய தேசிய கட்சி திட்டமிட்டுள்ளது.

இதேவேளை கடந்தபொது

( 8 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். வைத்தியசாலைக்கு லண்டன் உபகரணங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலைக்கு லண்டனிலிருந்து ஒரு தொகுதி மருத்துவ உபகரணங்கள் கிடைக்கவுள்ளன என யாழ். போதனா வைத்தியசாலை பதில் பணிப்பாளர் தெரிவித்தார்.

அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து திரும்பிய லூசியன் நகர மேஜர் சின்னமணியே இம் மருத்துவ உபகரணங்களை வழங்க முன்வந்துள்ளார் என தெரிவிக்கப்பட்டது.

இவர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு விஜயம்

(8ஆம் பக்கம் பார்க்க)

## தியாகி திலீபனுக்கு நேற்று 3-வது நாளாக மக்கள் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

தியாகி லெப். கேணல் திலீபனின் நினைவு நாட்களின் மூன்றாம் நாள் நிகழ்வுகள் நேற்று யாழ்குடாநாடெங்கும் சிறப்பாக நடைபெற்றன.

வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி ஆகிய மூன்று கோட்டங்களிலும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்தவர்களும் அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும் மற்றும் பெருமளவிலான வர்த்தகர்களும் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர்.

எல்லா இடங்களிலும் விசேட பந்தல் அமைக்கப்பட்டு திலீபனின் உருவப்படம் வைக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

உண்ணாவிரத அனுஷ்டிப்பின்போது திலீபனின் தியாகத்தைச் சொல்லும் உரைகளும் பாடல்களும் ஒலிபரப்புச் செய்யப்பட்டன.

இந்த மூன்று கோட்டங்களிலும் வர்த்தகர்கள் பெருமளவில் கலந்துகொண்டு உணர்ச்சி பூர்வமான அஞ்சலி நிகழ்வில் ஈடுபட்டனர்.

நேற்றைய நிகழ்வில் பொது மக்களுடன் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பலரும் எழுச்சி பூர்வமாகக்கலந்துகொண்டு தியாகி திலீபனுக்கு அஞ்சலி செலுத்தினர். (தி)

## வரி விளம்பரம்

### றெனி மூக்குக் கண்ணாடி அகம்

உங்கள் கண்களை சரியாக பரிசோதித்து, உடன் கண்ணாடி வழங்கப்படும் இல, 288, நாவலர் வீதி, ஆனைப் பந்தி, யாழ்ப்பாணம் (9398)

### விற்பனைக்குண்டு

மூன்று பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும். ந அருணாசலம், நாமகள் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு. கொக்குவில்.

(9410)

### பெற்றுக் கொள்ளவும்

13-ந் திகதி கண்டிக்குளத்தில் எங்களது சில பொருட்கள் மாறி வேறு Saree கள் வந்துள்ளது. குருந்த ஆதாரத்துடன் வந்து பெற்றுக்கொள்ளவும் P மலர்மகள், 20 கவாட்ஸ்லேன் கண்டிக்குழி.

(9439)

### தவறிவிட்டது

10-9-94 அன்று கிளாலி - அல்லிப்பளையில் சுப்பையா செல்வராசா என்பவருடைய அடையாள அட்டை (இல 443172203 V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்

(9442)

### புதிய மீரா பிரசுரம் "ஒரு பிடி மண்"

நாளைய சந்ததிக்காக இன்றைய இலக்கியம் கே. ஆர். டேவிட் எழுதிய இம் மண்ணின் கதைகள் மலையில் இருந்து ஒலிக்கும் மணியோசையாய் உங்களை உசுப்பும்... இவ்வாரம் வெளிவருகின்றது. (9396)

### பரிசளிப்பு விழா

கடந்த ஆண்டில் சைவ பரிபாலன சபை நடத்திய சைவ நெறித் தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா இன்று காலை ஒன்பது மணியளவில் நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சபையின் தலைவரான கொக்கு

---

## பிற்போடப்பட்டுள்ளது

வடபிராந்திய யாழ் ஆங்கில மருந்து வணிக மன்றத்தினால் 18-09-1994 இல் அதிர்ஷ்டம் பார்க்கப்படவிருந்த அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது. இதனால் ஏற்படும் சிரமத்துக்கு, மன்னிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்

செயலாளர்
க. மு. பத்மநாதன்
(வ யா. ஆ ம. வ. ம)

(சி- 10361)

---

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### கந்தையா பரமானந்தம்
(அதிபர், சிறிலங்கா வித்தியாசாலை பருத்தித்துறை)

என் அன்பான அப்பா!
நீங்கள் எங்களை விட்டுச் சென்று ஓராண்டாகி விட்டது. எம் துன்பமோ இன்னும் ஆறவில்லை. நீங்கள் தந்த அறிவும் நற்சிந்தனையும் என்னை ஆறுதல் படுத்துகின்றது நீங்கள் செய்த பணி நீங்கள் செய்த தருமம் என்னை தலை காக்கிறது அப்பா. உங்கள் அன்பு மகள் ஆசைவார்த்தை கேட்கவில்லை அதற்குள் மின்னல் வேகத்தில் காலன் கவர்ந்து விட்டான்; நீங்கள் விட்டுச் சென்ற பணிகள் மீண்டும் தொடருவோம் அப்பா! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனுக்கு நித்தம் மலர்பூசை செலுத்துகிறோம்.

இன்றைய தினத்தில் மரணித்த நண்பர்களையும் நினைவு கூருகிறோம்.

தகவல்:
மனைவி ப. மதி.
மகள் ப மிதிலா

(9431)

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்:
1972-05-31

தாயக மீட்பில்:
1993-09-29

### வீரவேங்கை ஜனார்த்தனி
(சீனிவாசகம் குணவதி)

### திதி: 18 - 09 - 1994

நினைவுகள் நெஞ்சில் அழிவதில்லை - உன்
அன்பை யாரும் மறக்கவில்லை
தாயக மண்ணின் விடியலுக்காக
விதையாகிப் போனவளே
தரணி போற்ற நாயகம் மலரும் - உன்
இலட்சிய கனவு நனவாகும்.

இவருடன் வீரச்சாவை தழுவிய அனைத்து மாவீரர்களையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

உங்கள் நினைவுகளுடன்

தாய், தந்தை
சகோதரர்கள்
உறவினர்

குசைப்பர் கோவிலடி,
கோப்பாய்

(9408)

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மண்ணில்
22-11-1952

அரக்கர் அழிப்பில்
18-09-1993



### உயர்திரு முத்தையா துரைசிங்கம் அவர்கள்
(முன்னாள் இலட்சுமி கபே உரிமையாளர்)

அன்பும் பண்பும், ஆற்றலுடன் பணிவும்
அகமுழுதும் கனிவும் அணிகலனாய் கொண்டவனாம்
மலர்ந்த முகமும் மனம் கோணா மாண்பும் - நீ
மதியில் உயர்ந்ததோர் மானிடனாய்க் காட்டியது.
மட்டற்ற மகிழ்ச்சியில் மக்கள் நாம் மயங்குகையில்
மரணமெனும் அவலத்தை மாற்றான் விமானம் தான்
வந்ததோ?

---

## நினைவு கூருகின்றோம்...

### 18-09-1994

1989-ம் ஆண்டு பருத்தித்துறையில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். வன்னிபாபு** (உருத்திரகணேசன் சிறீரங்கன் - புலோலி தெற்கு, பருத்தித்துறை - யாழ்)

**ஜீவன்** (ஐயாமுத்து உதயகுமார் - உடுத்துறை, தாளையடி, - வடமராட்சி கிழக்கு)

1990-ம் ஆண்டு யாழ் காங்கேசன்துறைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**சுலக்ஷன்** (தியாகராசா போகராசா - வத்திராயன் வடக்கு, தாளையடி - வடமராட்சி)

1991-ம் ஆண்டு யாழ்- காங்கேசன்துறைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**கப்டன் பீற்றர்** (கணபதிப்பிள்ளை அரியநாயகம் - முனைக்காடு, கொக்கட்டிச்சோலை - மட்டு)

**மேஜர் விஜி** (முத்து சிவலிங்கம் - 69, கொத்தம்பியன்குளம் - துணுக்காய்)

மட்டு - பள்ளிதிடலில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**நிமல்ராஜ்** (அம்பாறை)

**லெப். பல்லவன்** ( - மட்டு)

இதே சம்பவத்தில் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

**அருமை** (- - மட்டு)

மட்டு - மகளூரில் சிறிலங்கா இராணுவத்தினரின் சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய,

**சிரஞ்சீவி** (துரைச்சாமி லவக்குமார் - குருமண்வெளி களுவாஞ்சிக்குடி - மட்டு)

**சியாம்** (சுப்பிரமணியம் புனிதகுமார் - பெரியகல்லாறு - மட்டு)

**மித்திரன்** (முத்துச்சாமி பாக்கியராசா - தெல்வத்தை, மொறக்கொல்ல)

1992-ம் ஆண்டு யாழ் - மாதகல் இளவாலைப் பகுதிகளில் நிலைகொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் பண்டத்தரிப்பு நோக்கி முன்னேறமுயன்ற போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப் தேவானந்** (தேவராணி சுப்பிரமணியம் - ஐயனார் கோவிலடி, மல்லாகம் - யாழ்)

**நாகமுத்து** (இராமச்சந்திரன் கோணேஸ்வரன் - சில்லாலை - பண்டத்தரிப்பு)

1993-ம் ஆண்டு முல்லைத்தீவு மாத்தளன் பகுதியிற் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**மேஜர் மூர்த்தி மாஸ்ரர்** (சந்திரசேகரம் கிருஷ்ணமூர்த்தி - பொலிகண்டி - வல்வெட்டித்துறை)

**2ம் லெப். விவேகன்** (பொன்னன் கிருபாகரன் - ஆவரங்கால் - புத்தூர்)

**நவநீதன்** (விஜயராஜா விஜயமோகனராஜா - உருத்திரபுரம் - கிளிநொச்சி)

இதே தினத்தில் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும் கடற்பரப்பிலும் சிறிலங்காப் படையினராலும், இந்தியப்படையினராலும் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்.

ப்பு விழா இன்று காலை ஒன்பது மணியளவில் நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சபையின் தலைவரான கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் இ மகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இப் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி கலந்து கொள்ளவுள்ளார்.

## கண்டெடுப்பு

செல்லையா கணபதிப்பிள்ளை திருமதி கணபதிப்பிள்ளை, தங்கச்சிப்பிள்ளை, திருமதி கணேசபிள்ளை சாரதாதேவி ஆகியோரது கடவுச் சீட்டுகளும், தேசிய அடையாள அட்டையும் மற்றும் சில ஆவணங்களும் கண்டெடுக்கப்பட்டு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் அலுவலக நேரத்தில் நேரில் வந்து ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளலாம்

## மாதாந்த கூட்டம்

தமிழீழ கல்வி மேம்பாட்டு பேரவையின் மாதாந்த அமர்வு நாளை காலை பத்து மணியளவில் பேரவையின் மண்டபத்தில் இடம்பெறும் எனவும், உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளும்படியும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## தங்கப்பதக்கம் வென்றார்

சுவாமி விவேகானந்தர் சிக்காக்கோ நகரில் பேருரை ஆற்றிய நூற்றாண்டு விழாவை முன்னிட்டு இந்து மா மன்றம் நடத்திய கட்டுரைப் போட்டியின் ஆரம்ப பிரிவில் யாழ்/ஏழாலை தெற்கு அமெரிக்கன் மிசன் பாடசாலையை சேர்ந்த மாணவி செல்வி சிவ சத்தியபாலன் ஜீத் அகில இலங்கை ரீதியில் முதலாமிடத்தை பெற்றுக்கொண்டுள்ளார். இதற்காக இந்து மா மன்றம் இவருக்கு கடந்தபத்தாம் திகதியன்று தங்கப்பதக்கமொன்றை [illegible]

---

தகவல்:
மனைவி ப. மதி.
மகள் ப மிதிலா

(9431)

---

## 2ஆம் ஆண்டு நினைவலைகள்



தாய் மடியில்:
07 08.1976

தாயக மண்ணில்
18.09 1992

### வீரவேங்கை நாகமுத்து
(இராமச்சந்திரன் கோணேஸ்)
(சில்லாலை றோ. க.த.க. பாடசாலை மாணவன்)

திருக்கோணேசர் வாழும் திருகோண மலையில்
கோணேசனாக பிறந்த மகனே
தாய் நாட்டின் மீது அன்பு கொண்டு
ஈழத்தாய் விலங்கொடிக்க துணிவு கொண்டு
எதிரியின் பாசறையை தகர்த்து நின்றாய்
கனியாக முன் விதையான காவியமானவனே
எட்டு இரண்டு ஆண்டுதனில் விரைந்தாயே
செந்தமிழீழம் காக்க.

சிரித்த முகம் காணத்துடிக்கும்

பெற்றோர்:- திரு. பொ. இராமச்சந்திரன்
திருமதி இ இரத்தினேஸ்வரி
சகோதரர்:- கௌசல்யா, சுரேஸ், சதீஸ்
அம்மம்மா:- சபாபதி அன்னப்பிள்ளை
ஏகாம்பரம் குடும்பத்தினர்

தற்காலிக முகவரி:-
டச்சு வீதி, முரசொலி அருகாமை
கல்வியங்காடு

(சி.-10343)

---

மதியில் உயர்ந்ததோர் மானிடனாய்க் காட்டியது.
மட்டற்ற மகிழ்ச்சியில் மக்கள் நாம் மயங்குகையில்
மரணமெனும் அவலத்தை மாற்றான் விமானம் தான்
- வந்ததோ?

ஐயா நீர் எமை விட்டு ஆண்டோ ஒன்றாகினாலும் - எம்
அகமெல்லாம் உம் நினைவே அகல் விளக்காய் இருக்கிறது

- குடும்பத்தினர்
சகோதரர்.

இத்தாவில், பளை

(9428)

---

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### செல்வன் கதிர்காமவேல் அம்புஜன்

தோற்றம்
20 - 10 - 1973

மறைவு
27 - 09 - 1993

திதி: 18 - 09 - 1994

அன்பால், பண்பால், அடக்கத்தால்
அழியாத கல்விச் செல்வத்தால்
அனைவரையும் கவர்ந்திட்ட
ஐயா எங்கள் அம்புஜனே - நீ சென்று
ஆண்டு ஒன்று ஆகுதையா
ஆயிரம் ஆண்டு கடந்தாலும் - எமைவிட்டு
அகலாதையா உன் நினைவு.

உன்பிரிவால் வாடும்,
தந்தை. தாய். சகோதரர்கள்
உறவினர்கள்.

நவக்கிரி,
புத்தூர்.

(9436)

---

தேசங்களிலும் கடற்பரப்பிலும் சிறிலங்காப் படையினராலும், இந்தியப்படையினராலும் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்.

அனைவரையும் இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி- 10360)

---

## 1-ம் ஆண்டு நினைவுப் பூக்கள்



பிறப்பு:
21-11-1971

வீரச்சாவு:
29-09-1993

### கப்டன் சாந்தன் - மோகனரூபன்
(தங்கவேல் ராதாமோகன்)

தேரோடும் திருநாளில் திருமால் அடி சேர்ந்த சாந்தன் அவர்களின் நினைவு நிகழ்வில் (18-09-94 ஞாயிறு) இன்று சகபோராளிகள் உறவினர் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

-குடும்பத்தினர்.

இந்திர அம்மன் கோயிலடி
துன்னாலை வடக்கு,
கரவெட்டி.

(9443)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

# இவ்வருட யாழ். மாவட்ட முன்னணி கிரிக்கெட் வீரர் சுந்தரலிங்கம் சுதேசனுடன் ஒரு சந்திப்பு

இவ்வருடம் பாடசாலைக் கிரிக்கெட் பருவம் முடிவடைந்து பின்னர் கழகக் கிரிக்கெட் ஆரம்பமாகி தொடர்ந்து கலகலப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது இப்போட்டிகளில் வீரர்கள் எல்லோருமே தத்தம் திறமைகளை வெளிப்படுத்தியிருந்தார்கள். இளம் வீரர்களைப் பொறுத்தமட்டில் சிலர் அதீத திறமை காட்டினார்கள். அவர்களுள் ஒரே சீரான தகுதி நிலையைப் பேணிய சுந்தரலிங்கம் சுதேசன் முதன்மையானவர் என்பது ரசிகர்களின் ஏகோபித்த கணிப்பு இத்தகையவரை ரசிகர்களுடன் இன்னும் நெருக்கமாக்கி அவரின் கருத்துக்களை ரசிகர்களுடன் பரிமாற நாம் ஒரு பாலமாக அமைய எண்ணினோம். நாம் சுதேசனைச் சந்தித்து இதுபற்றிக் கூறியதும், அவர் கூச்சத்துடன் மறுத்துவிட்டார். இருப்பினும் ரசிகர்கள் பலரின் விருப்பம் இது வென்றதும் பல்கலைக்கழகத்தில் பொறுப்பானவர்களின் அனுமதியின் பின் ஏற்றுக் கொண்டார். இவரது விளையாட்டுப்பாணி அதீதமானது.

சகல துறை விற்பன்னரான இவரின் பிரமிப்பூட்டும் திறமை விக்கெட்டுக்களுக்கு இடையில் ஓடும் அபரித வேகம்.

24 வயது நிரம்பிய சுதேசன் யாழ். பல்கலைக்கழக 3-ம் வருட மருத்துவபீட மாணவர். பரியோவான் கல்லூரி பழைய மாணவர்

இவரிடம் பாடசாலைக் காலம் பற்றிக் கேட்டோம்.

''1986-ல் 17 வயதிற்குட்பட்ட அணியில் ஆட ஆரம்பித்தேன். தேவதாசன் மாஸ்ரர் பொறுப்பாசிரியராக இருக்க, சூரி அண்ணை பயிற்றுனர். சூரி அண்ணையே எனக்கு கிரிக்கெட் அரிச்சுவடி சொல்லித்தந்தவர். நான் 87, 88, 89 காலப் பகுதியில் 19 வயதிற்குட்பட்ட அணி வீரனாக இருந்தேன். நான் எப்பொழுதுமே 3-ம் இலக்க துடுப்பாட்டவீரன். எமது அணிக்கு ஒரு சுழல் பந்து வீச்சாளர் தேவை என்று சூரி அண்ணர் கருதியதால், அவரால் நான் ஒரு சுழல் பந்து வீச்சாளனாக உருவாக்கப்பட்டேன். ஆனால் அணி மிகத் திறமையானதாக இருந்தமையால் எனக்கு பந்து வீசும் சந்தர்ப்பங்கள் மிகக் குறைவாகவே கிடைத்தன. 19 வயதிற்குட்பட்ட பிரிவில் நான் ஆடும் போது சிலிப் பகுதியில் பந்து காக்கப் பயிற்றுவித்தவர் சேவியர் மாஸ்டர் கிரிக்கெட் தொடர்பான பல நுணுக்கங்களை அறிய இவரும் உதவியாக இருந்தார்.

89-ல் சாப்ரா நிறுவனத்தினர் வடக்கின் சிறந்த பாடசாலையணியாக எமது கல்லூரி அணியைத் தெரிவு செய்தனர். இதில் நானும் ஒரு அங்கத்தவனாக இருந்தது எனக்குப் பெரும் மகிழ்ச்சி.

★ உங்கள் பாடசாலைக் காலத்தில் குறிப்பிடத்தக்க சம்பவங்கள்......?

யாழ்ப்பாணக் கல்லூரிக்கு எதிராக 83 ஓட்டங்கள் பெற்றேன் இன்னொரு சந்தர்ப்பத்தில் 79 ஓட்டங்கள் பெற்றிருக்கிறேன். யாழ்ப்பாணக் கல்லூரிக்கு எதிராக விளையாடிய 3 வருடங்களிலும் அரைச்சதங்கள் பெற்றிருக்கிறேன் பாடசாலைக் காலத்திலேயே ஜொனியன்ஸ் கழகத்துக்காகவும் விளையாடியுள்ளேன்.

★ நீங்கள் எப்போது பல்கலைக்கழகம் சென்றீர்கள்?

90-91இல் பல்கலைக்கழகம் நுழைந்தேன். 92இல் இருந்து பல்கலைக் கழக அணிக்கு விளையாடுகின்றேன். இவ் அணிக்குள் நுழைவது மிகவும் கஷ்டமாக இருந்தது திறமைக்கு மட்டுமே முன்னுரிமை கொடுக்கப்படும் நான் முதல் ஆட்டத்துக்கே தெரிவு செய்யப்பட்டேன். அதில் ஸ்ரான்லி வி. கழகத்துக்கு எதிராக அரைச்சதம் பெற்றேன். 92 பருவகாலத்தில் KCCC க்கு எதிராக 3 அரைச் சதங்கள் ஜொலிஸ்ரார் கழகத்துக்கு எதிராக ஒரு அரைச்சதம் என்று சேகரித்தேன்.

★ நீங்கள்பந்துவீச்சுத்துறையில் எப்படி அறிமுகமாகினீர்கள்?

92இல் நாங்கள் சாப்ராவுக்கு எதிராக ஒரு ஆட்டத்தில் ஆடிக் கொண்டிருந்தோம் அந்தப் போட்டியில் இறுதியில் தோல்வியைத் தழுவினோம் என்பது உண்மைதான். இறுதி 3 ஓவர்களில் 13 ஓட்டங்களை சாப்ரா பெறவேண்டிய நிலையில் நான் அகிலனால் பந்துவீச்சாளனாக அறிமுகமாகினேன். 4 ஓட்டங்களை மட்டும் விட்டுக் கொடுத்து 2 இலக்குகளைக் கைப்பற்றினேன். அன்றில் இருந்து இன்றுவரை நான் 3-ம் இலக்கத்துடுப்பாட்ட வீரனாகவும் முதல் மாற்றப் (1st CHANGE) பந்து வீச்சாளனாகவும் இருந்து வருகிறேன். இந்தவகையில் பந்துவீச்சாளனாக என்னை அறிமுகப்படுத்திய அகிலனுக்கு நன்றியுடையவனாக இருக்கிறேன்.

★ பல்கலைக்கழகத்தில் ஆடுவதற்கும் பாடசாலையில் ஆடுவதற்கும் இடையில் என்ன வேறுபாடு காண்கிறீர்கள்?

இங்கு நான் பல்கலைக் கழக ஆட்டம் பற்றியே சிறப்பாகக் குறிப்பிட வேண்டும். இதுபற்றிக் கூறும்போது பல்கலைக்கழக அணி பற்றிய சில கருத்துக்களும் கூடவேவரும். நான் பல்கலைக்கழகத்துக்குள் புதியவனாகச் செல்லும் போது அது முற்றிலும் புதிய சூழ்நிலை- பாடசாலை அணியில் எல்லோரும் தெரிந்தவர்களாக இருப்பார்கள். ஏனெனில் 10 வருடங்கள் அங்கேயே கற்கிறோம் இங்கு அப்படியல்ல திடீரென்று நுழைகிறோம். எல்லாம் புதுமுகங்கள் வாழ்க்கையின் முக்கியமான கட்டம். சுற்றலின் அழுத்தம் ஒருபுறம். வித்தியாசமான வாழ்க்கை எதிர்காலப் பயம் இப்படியான சூழலில்தான் ஒரு அணியாக இணைகிறோம். இதனாற்றான் புரிந்து கொள்ளுதலில் சிறிது தாமதம் ஏற்படுகிறது அது ரசிகர்கள் மத்தியில் வீரர்கள் தனித்துவம் பேணும் ஓர் உயர் எண்ணநிலை என்ற அபிப்பிராயத்தை ஏற்படுத்தி விடுகிறது. நிச்சயம் அப்படியொரு நிலை இல்லை. நாங்கள் நெல்லிக்காய் மூட்டையல்ல. அண்மைக் காலங்களில் பல்கலைக்கழக அணியின் செயற்பாடு பற்றி ரசிகர்கள் அவதானித்தே வந்திருப்பார்கள். உதிரிகளாகச் செயற்பட்டால் குறுகிய காலத்தில் மிகப் பலமான அணியாக பல்கலைக்கழக அணி வளர்ந்திருக்க முடியாதே. நாங்கள் ஒரு ஒற்றுமையான குடும்பமாகவே இணைந்து செயற்பட்டு வருகிறோம் என்பதை நான் கூற விரும்புகின்றேன்.



★ கற்றற் செயற்பாடுகளுக்கே கூடுதலான முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய சூழ்நிலையில் விளையாட்டில் உங்களை ஈடுபடுத்திக் கொள்வது கஷ்டமானதொரு செயற்பாடல்லவா?

உண்மையில் முதலாவது தெரிவு கற்றலுக்குத்தான். பல்கலைக்கழக அணியினர், பயிற்றுநர், பொறுப்பாளர், ஆசிரியர்கள் எல்லோருமே அதற்குத்தான் மிக முக்கியத்துவம் கொடுப்பார்கள். அதன்பின் மிகுந்த களைப்பிலும், கஷ்டத்தின் மத்தியிலும் பயிற்சி பெறுவோம். பல தடவைகளில் மாட்ச் நடைபெறும்போது வகுப்பிலும் கலந்து கொண்டு, பின் மாட்சும் விளையாடி பின் திரும்பவும் வகுப்புக்கு ஓடி... இப்படி இப்படியே இரண்டையும் இழுத்துக் கொண்டு நாம் ஓடிக் கொண்டிருக்கிறோம்.

நேர்காணல்

**நிர்மலன்**

பல்கலைக்கழக ஆசிரியர்கள், பணிப்பாளர் போன்றோரின் ஊக்கமும் எனக்கும் அணிக்கும் தெம்பை அளிக்கிறது, பல்கலைக்கழக விளையாட்டுத் துறைப் பணிப்பாளர் திரு. தியாகராசா, விரிவுரையாளர்கள் திரு. நடராஜசுந்தரம், திரு. அருள்வேல், கலாநிதி சிறிசற்குணராசா என்போர் எங்கள் மீது மிகுந்த அக்கறையும், பரிவும் கொண்டவர்கள். இவர்களின் உற்சாகம் இல்லாவிட்டால் நாம் இவ்வளவு தூரம் சிறப்பாகச் செயற்பட முடியும் என்று நான் எண்ணவில்லை- நான் ரசிகர் அறிந்த கிரிக்கெட் வீரனாக இருக்கிறேன் என்றால் அதற்குக் காரணம் பல்கலைக்கழகம்தான். இந்த வகையில் பல்கலைக்கழகம் பெற்ற சிறப்பில் எனதுபங்கு மிகச்சிறியதே. ஆனால் உண்மையில் மறைந்த எமது உபவேந்தர் துரைராசா பல்கலைக்கழக விளையாட்டுத்துறைக்கு செய்துள்ள சேவைகள் அளப்பரியன. அவர் இந்த நேரத்தில் நன்றியுடன் நினைவு கூரப்படவேண்டியவர். இதேவேளை எமது புதிய துணைவேந்தர் முன்பு நிகழ்ச்சிகள் எவ்வகையில் நடைபெற்றதோ, அச்சிறப்புகள் எவ்வகையிலும் குறையாமல் எல்லாம் நடைபெற வேண்டும். என்று எமக்குப்பரிபூரண ஒத்துழைப்பு வழங்கியுள்ளார். இத்தகைய ஒரு சூழ்நிலை பல்கலைக்கழகத்தில் காணப்படுவது எமது அதிர்ஷ்டம்;

★ விக்கெட்டுகளுக்கிடையில் வேகமாக ஓடுவதென்பது இன்றைய கிரிக்கெட் உலகின் சிறந்த நுட்பமாகவே கைக்கொள்ளப்படுகிறதே நீங்கள் மிகவேகமாக ஓடுபவர் இது எப்படிச்சாத்தியம்?

இந்தவிடயம் இருவரைப் பொறுத்தது. நான் இப்படியொரு பெயர் பெற்றிருக்கிறேன் என்றால் அதன் அரைவாசிப்புகழ் என்னோடுசோடி சேர்ந்தாடும் திலக்கிற்குச் சேரவேண்டும். நாங்கள் இருவரும் ஒருவரையொருவர் நன்கு புரிந்துகொண்டவர்கள் ஏனையோருடன் சோடி சேரும் போது மற்றவரும் பிழை விடலாம், நானும் கூட மற்றவருக்குப்பாதகமாக அமைந்து விடலாம். ஆனால் நானும் திலக்கும் பல விடயங்களை நன்கு புரிந்து, கற்று வைத்திருக்கிறோம். களநிலை, வீரர்களின் தன்மை, தேவை என்பன பொறுத்து மிகவேகமாகச்செயற்படுவோம் இதில் என்னிடம் உள்ள ஓட்டம் பெறும் தாகம் என்ற உணர்வே முக்கியம். அதனாலேயே நான் மிகவேகமாகச் செயற்பட முடிகின்றது. என்னைப் பொறுத்தவரை, சிறப்பாக மட்டுப்படுத்தப்பட்ட ஆட்ட

(4ஆம் பக்கம் பார்க்க)

## - '94 பருவகாலம்

யாழ். பல்கலைக்கழகத்துக்காக 12 ஆட்டங்களில்
484 ஓட்டங்கள்
5 அரைச்சதங்கள்

| | | |
|---|---|---|
| எதிர் சென்றலைட்ஸ் | 50 | |
| பற்றீசியன் | 91 | |
| கிராஸ்கொப்பர்ஸ் | 64 | |
| சென்றலைட்ஸ் | 93 | ஆட்டமிழக்காது |
| மானிப்பாய் பரிஷ் | 73 | ஆட்டமிழக்காது |

பந்து வீச்சு

| O | R | W | CT |
|---|---|---|---|
| 89 | 310 | 28 | 11 |

(சராசரி - இலக்குக்கு .5 ஓட்டம்)

சிறந்த தனி ஆட்டப் பந்து வீச்சு
எதிர் பற்றீசியன் (டொனால்ட் கிண்ணம்)

| O | M | R | W |
|---|---|---|---|
| 6 | 2 | 11 | 5 |

## விளையாட்டு அரங்கு

ஓல்ட் கோல்ட்ஸ் நடத்திய கிரிக்கெட் சுற்றுப்போட்டி

# ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம்

# யாழ் மாவட்ட ஹொக்கி சம்பியனாக

# ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் வெற்றிக்கேடயத்தை சுவீகரித்தது

அசோகா நகை அகத்தின் ஆதரவில் யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் விளையாட்டுப் பிரிவான ஓல்ட் கோல்ட்ஸ் விளையாட்டுக் கழகத்தால் நடாத்தப்பட்ட ஆறு பேர் ஆறு ஓவர் கொண்ட விலகல் முறையிலான தோற்பந்து கிறிக்கெட் சுற்றுப் போட்டிகள் செப்டெம்பர் மாதம் 2-ம், 3-ம் திகதிகளில் யாழ்ப்பாணக் கல்லூரி தொழில் நுட்ப ஸ்தாபன மைதானத்தில் நடைபெற்றது இதற்கு பிரதம விருந்தினராக திரு. திருமதி கே, என். வை. மொறிஸ் அவர்களும் சிறப்பு விருந்தினராக அசோகா நகை அகத்தின் உரிமையாளர் திரு எஸ். ஜனத்குமார் அவர்களும் கலந்து கொண்டனர். பரிசளிப்பு வைபவம் யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் ரி. ஆனந்தரட்னத்தின் தலைமையில் நடைபெற்றது. பரிசில்களை திருமதி மொறிஸ் அவர்கள் வழங்கினார்.

இவ்வாட்டங்களில் பன்னிரெண்டு அணிகள் பங்கு பற்றி ஜொலிஸ்ரார் அணி முதலாம் இடத்தையும் சாப்ரா அணி இரண்டாம் இடத்தையும் பெற்றன. இதில் பற்றீசியன் அணி ஓல்ட் கோல்ட்ஸ் பீ அணிக்கு எதிராக 106 ஓட்டங்களையும் ஜொலிஸ்ரார் அணி மானிப்பாய் பரிஷ் அணிக்குஎதிராக 102 ஓட்டங்களையும் பெற்றன. பரிஷியன் அணியின் வீரன் எரிக் நிமலன் இவ்வாட்டத்தில் ஆகக் கூடுதலான 48 ஓட்டத்தையும் ஒரு ஓவரில் தொடர்ச்சியாக மூன்று விக்கட்டுக்களை வீழ்த்தி (கற்றிக்) ஆட்டம் முழுவதிலும் கூடுதலாக விக்கட்டுக்களை 5ஐ பெற்று சிறப்பு பரிசை பெற்றுக் கொண்டார் மற்றைய சிறப்பு பரிசு கே கணேஸ் இற்கும், இறுதி ஆட்ட சிறப்பு வீரனாக எஸ் வரதனும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

### அரையிறுதி ஆட்டங்கள்

பற்றீசியன் அணியை எதிர்த்து விளையாடியசாப்ரா அணி வெற்றி பெற்றது. இதில்சாப்ரா அணி 72 ஓட்டங்களையும், பற்றீசியன் அணி 37 ஓட்டங்களையும் பெற்றன.

இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் ஜொலிஸ்ரார்



அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் அணி மோதியது. இதில் ஜொலிஸ்ரார் அணி 46 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. ஜொலிஸ்ரார் அணி 75 ஓட்டங்களும் சென்றலைட்ஸ் அணி 29 ஓட்டங்களும் பெற்றன.

இறுதியாட்டத்தில் சாப்ரா அணியும், ஜொலிஸ்ரார் அணியும் மோதிக்கொண்டன. முதலில் துடுப்பெடுத்தாடிய சாப்ரா மொத்தம் 52 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது இரண்டாவது ஓவரில் பாஸ்கரனின் இலக்கு முதலாவதாக வீழ்கிறது. இது அணிக்கு பின்னடைவைக் கொடுக்கிறது அதன் பின் துடுப்பெடுத்தாடவந்த கணேஸ் 27 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டமை சிறப்பானது. மூன்றாவது ஓவர் அஜந்தனுடையது இதில் அவர் 6 ஓட்டங்களை மட்டுமேவிட்டுக்கொடுத்தார் 4 வது ஓவர் சாப்ராவுக்கு மேலும் அழுத்தமாயிற்று இவ் ஓவரில் 7 ஓட்டங்களை மட்டும் கொடுத்து இரண்டு இலக்குகளையும் சசிசேகரன் வீழ்த்தினார் அடுத்தடுத்து வந்த 5ம் 6ம் ஓவர்களில் தயாளனும் பெரிய வரதனும் முறையே 97 ஓட்டங்களை மட்டும் விட்டுக் கொடுத்தனர் சிறந்த பந்து வீச்சு சாப்ராவை தம்மிஷ்டப்படி ஆடவிடாது சட்டுப்படுத்தி52 ஓட்டங்களை மட்டும் பெற முடிந்த நிலைக்கு உள்ளாக்கிற்று.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் அணியினர் ஆரம்பத்தில் சிறப்பாக ஆடினும் பின்னர் சிறிது அழுத்தத்துக்குள்ளாயினர். இருந்தும் சாப்ரா அணி தவறவிட்ட பிடிகள் ஜொலிஸ்ரார் அணிக்குச்சாதகமாயிற்று. முதல் ஓவரிலேயே ஜொலிஸ்ரார் அணி 15 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இரண்டாவது ஓவரில் 1வது இலக்கு வீழ்கிறது. (எஸ் வரதன்). அப்போது எண்ணிக்கை 32. இரண்டாவது இலக்கு 48-ல் 5வது ஓவரில் விழுகிறது. ஆனால் இதற்கு முன் வரதனின் பிடியொன்றை சாப்ரா நழுவவிடவே

(4ஆம் பக்கம் பார்க்க)

# மீண்டும் பல்கலைக் கழக அணி

சர்வதேச ரீதியில், பிரபலமான உதைபந்தாட்டம், கிரிக்கெட் போட்டிகளைப் போன்று ஹொக்கி ஆட்டமும் இன்று வளர்ந்து வருகின்றது கடந்தகாலத்தில் தென்னாசிய நாடுகளான இந்தியா, பாகிஸ்தான் இப்போட்டியில் முன்னணி வகித்தாலும் இன்று மேற்கு ஐரோப்பிய நாடுகள் மற்றும் அவுஸ்திரேலியா, கொரியா போன்றவையும் இவ்விளையாட்டில் சிறப்பாக ஆர்வம் காட்டிவருகின்றன.

ஹொக்கி அணியானது இலங்கையில் வங்கிகளிலும், கழகங்களிலும் பல்கலைக்கழகங்களிலும் வளர்ச்சி கண்டுள்ளது யாழ்ப்பாணத்தைப் பொறுத்து விரல் விட்டு எண்ணக் கூடிய அளவிற்கு ஏழு அணிகளே தொடர்ந்தும் இயங்குவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. யாழ்ப்பாணத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி, பரியோவான் கல்லூரி, மகாஜன கல்லூரி, ஹாட்லிக்கல்லூரி மற்றும் பல்கலைக் கழகங்களிலும், சில குறிப்பிட்டுக் கூறக்கூடிய கழகங்களும் ஹொக்கி போட்டியினையும் சிநேகிதபூர்வமான விளையாட்டினையும் கடந்த காலத்தில் நடாத்தி வந்தது எனினும் தற்போது இவற்றில் சில கல்லூரிகளில் 'ஹொக்கி வளை நோல்களின்'' தட்டுப்பாட்டாலும், அதிக செலவாலும்' ஹொக்கி அணி' மறைந்து செல்வதைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

எனினும் பழமை பேணும் கல்லூரிகளும் விளையாட்டு கழகங்களும், பல்கலைக் கழகமும் இதன் தாற்பரியத்தை காத்து வருவதனை காணக் கூடியதாய் இருக்கின்றது.

இந்த வகையில் யாழ் மாவட்ட மட்டத்தில் நடாத்தப்பட்ட ஹொக்கிப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. இவ்வாறு கடந்த இருவருடங்களுக்கான போட்டியில் யாழ் பல்கலைக்கழக அணி சம்பியனாகியுள்ளது விளையாட்டு அமைச்சினால் மாவட்ட மட்டத்தில் நடாத்தப்பட்ட இப்போட்டியில் இவ்வருடம் நடாத்தப்பட்ட 92-93 ஆண்டிற்கான போட்டியிலும், கடந்த வருடம் நடத்தப்பட்ட 91/9 2ஆண்டிற்கான போட்டியிலும் பல்கலைக்கழக அணி சம்பியனானது.

> ''1992/93ஆம் ஆண்டு ஹொக்கி தொடர் போட்டியில் பல்கலைக்கழக அணி எந்தப் போட்டியிலும் தோல்வியைச் சந்திக்கவில்லை என்பதோடு இவ் அணிக்கு எதிராக எந்தவொரு அணியும் ஒரு கோல்தானும் போடவில்லை''

அண்மையில் யாழ் பல்கலைக் கழகத்தில் ஹொக்கி மைதானத்தில் நடைபெற்ற இச்சுற்றுப் போட்டியில் யாழ் பல்கலைக் கழக அணி, ஓல்ட் கோல்ட்ஸ் அணி, ஜொனியன்ஸ் அணி. சப்றா அணி மற்றும் கிறாஸ் கொப்பேர்ஸ் விளையாட்டு அணிகள் பங்கு பற்றின.

முதல் சுற்றுப் போட்டியில் ஜொனியன்ஸ் அணியை வெற்றி கொண்ட பலமிக்க அனுபவம் வாய்ந்த வீரர்களை கொண்ட வட்டுக் கோட்டை ' ஓல்ட்கோல்ட்ஸ்' அணியை பல்கலைக்கழக அணி அரைஇறுதி ஆட்டத்தில் சந்தித்தது.

ஆட்டம் ஆரம்பம் முதல் இறுதி வரை விறுவிறுப்பாக இருந்த போதும் போட்டி முடிவடைவதற்கு சில நிமிடங்கள் இருக்கையில் பல்கலைக் கழக அணியினரின் அபார ஆட்டத்தினாலும் சளைக்காது விளையாடியதனாலும் இறுதியில் ரி நரேஷ் ஒரு கோலைப் (1 - 0) போட்டதன் மூலம் பல்கலைக்கழக அணி வெற்றியை தமதாக்கி கொண்டது

வட்டுக்கோட்டை ஓல்ட் கோல்ட்ஸ் அணியில் தேசிய ரீதியிலும், இலங்கை அணியிலும் விளையாடிய 'ஹொக்கி பாலா'' மிகவும் திறமையாக விளையாடினார். இவர்களுடன் சேர்ந்து விளையாடிய பி சயந்தகுமார், ஆர். ரமேஷ், ஆர். முரேன், வி. பி. தனேஸ்வரன், குலரட்ணம். கே. இ பிரதீபன். சிறப்பாக விளையாடிய போதிலும் இவர்களால் பல்கலைக்கழக அணியிடம் தோல்வியை தழுவவேண்டிவந்தது.

மற்றைய அரைஇறுதி ஆட்டத்தில் சப்றா அணியை இறுதிநேரத்தில் வெற்றி கொண்ட கிராஸ் ஹொப்பேர்ஸ் அணியினர் இறுதி ஆட்டத்தில் யாழ் பல்கலைக்கழக அணியை சந்தித்தனர். ஆட்டம் ஆரம்பம்முதல் இறுதி வரை இருஅணிகளும் மிகத் திறமையாக விளையாடிய போது பல்கலைக்கழக அணியிடம் கிறாஸ் ஹொப்பேர்ஸ் அணி தோல்வி கண்டது. கிறாஸ் ஹொப்பேர்ஸ் அணியின் சார்பில் விளையாடிய சிறந்த ஆட்டக்காரன் ''துசி'' மிகவும் திறமையாக விளையாடினார்.

யாழ் பல்கலைக்கழக அணியின் வீரன் வி. சிவகுணனின் சளைக்காத ஆட்டத்தினால் 1 0 என்ற கோல்கணக்கில் வெற்றியைத் தமதாக்கி கொண்டது. இதன் மூலம் இரண்டாவது வருடமாக மாவட்ட மட்டத்தில் விளையாட்டு அமைச்சின் சம்பியன் பட்டத்தை யாழ் பல்கலைக் கழகம் பெற்றுக் கொண்டது. சிறந்த சாதனை என்றே கொள்ளலாம்.

1992-93 பருவக்காலத்தில் யாழ் பல்கலைக்கழகத்தில் பல்கலைக்கழக ஹொக்கி அணி கலந்துகொண்ட அனைத்துப் போட்டிகளிலும் வெற்றிபெற்று தோல்வி அடையாத ஒரு அணியாகத் திகழ்கிறது இவ் அணியில் பல்கலைக்கழக விளையாட்டு ''விருது''பெற்ற வீரர்களான எஸ். நோபிள் சுரேந்திரன், பி ராகுலன், ஆர். ஜெயசீலன், எஸ் ரமேஷ், ஜி. டி மதியழகன், வி. சிவகுணன். ரி கௌரிபாலன், பி. பரராஜசிங்கம் ஆகியோர் இடம்பெறுகின்றனர்.

இதில் பல்கலைக்கழக அணியின் முதுகெலும்பு என குறிப்பிடப்படுபவரும், இரும்பு மனிதனுமான பி. பரராஜசிங்கம் பாபு அபாரதமாகவும், நிதானமாகவும் பந்து காப்பாளர் ஆகவிளங்கினார். அதில் குறிப்பிடக்கூடிய சிறப்பு அம்சம் என்னவெனில் இவ் வருடம் இடம் பெற்ற 9 ஆட்டங்களிலும இவர் எவ்

(4-ம் பக்கம் பார்க்க)

# ஆவரங்கால் ம. வி. கழகம் நடத்திய கரப்பந்தாட்ட போட்டி முடிவுகள்

ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் அதில் இருந்து மறைந்த கழக அங்கத்தவர்களின் நினைவாக நடாத்திய கரப்பந்தாட்டப் போட்டிகளின் இறுதி ஆட்டங்களும் பரிசளிப்பு விழாவும், கடந்த 9-ம் திகதி நிலைய விளையாட்டு மைதானத்தில் மாலை 7 மணி தொடக்கம், மத்திய விளையாட்டுக் கழகத் தலைவர் திரு வே. இராசேந்திரம் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்ச்சிகளை பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின், யாழ்மாவட்டத்தின் சூழல் பாதுகாப்பு தொடர்பாளர் திரு கா. சிவசோதி தேசியக் கொடியை ஏற்றி ஆரம்பித்து வைத்தார்: முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட திரு. க. சபாரட்டினம் அவர்கள் மங்கள விளக்கை ஏற்றி வைத்தார்கள்.

ஆட்டம் ஆரம்பமாவதற்கு முன்பு, யாழ் மாவட்ட மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு எழிலன், கோப்பாய் விளையாட்டுத்துறை அதிகாரி திரு வி. வைரமுத்து ஆகியோருக்கு வீரர்கள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர்.

முதலாவது இடம் பெற்ற 6 வீரர்கள் பங்கு பற்றும் ஓவர் கேம் முறையிலான கரப்பந்தாட்டத்தின் இறுதி ஆட்டத்தில், வல்வெட்டி குணசேகரா விளையாட்டுக்கழக அணி அதனை எதிர்த்தாடிய நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை இருநேர் செற்றுகளில் 15:10, 15:11 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று சாம்பியன் ஆனது. இவ்வாட்டத்திற்கு நடுவராக திரு. ஆ. நவரட்டினம் கடமையாற்றினார்.

## கப்டன் குணசிங்கம்

அதனைத் தொடர்ந்து இடம் பெற்ற செற்றப் முறையிலான கரப்பந்தாட்டத்தின் இறுதி ஆட்டத்தில், காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் அதனை எதிர்த்தாடிய நாயன்மார்கட்டு விளையாட்டுக் கழக பாரதி அணியை பலத்த போட்டியின் பின் 3:2 என்ற செற் கணக்கில் 12;15, 8:15 15:01, 15:7, 15:06, என்ற புள்ளிகள் கணக்கில் வென்றது.

இரண்டு மணித்தியாலங்களும் 17 நிமிடங்களும் நீடித்த இவ்வாட்டத்தில் மூன்றாவது செற் மாத்திரம் அவ்வளவாக சோபிக்கவில்லை. மற்றைய நான்கு செற்றுகளிலும் ஒரு புள்ளியை ஒரு அணி பெறுவதற்குள் பல தடவைகள் பந்து மாற்றம் ஏற்பட்டதினால் பல தடவைகள் சேவிஸ் போட வேண்டியிருந்தது. பாரதி அணி வீரன் எஸ். நவனீதன், காங்கேசன் அணி வீரன் கே மனோகரன் ஆகியோர் வெகு சிறப்பாக ஆடி ரசிகர்களின் பாராட்டு தலைப் பெற்றனர்: அதே அணியைச் சேர்ந்த வீரன் எம். சுவர்ணன் சிறந்த சகல துறை ஆட்டக்காரனுக்கான பரிசைத் தட்டிக்கொண்டார்

இவ்வாட்டத்திற்கு நடுவர்களாக திரு கே இராசரெட்டினம் திரு எஸ். அப்புத்துரை ஆகியோர் கடமையாற்றினார்கள்:

இறுதியாக இடம்பெற்ற 4 வீரர்கள் மாத்திரம் பங்குபற்றும் ஓவர் கேம் முறையிலான கரப்பந்தாட்டத்தின் இறுதி ஆட்டத்தில் வல்வெட்டி குணசேகரா விளையாட்டுக்கழக அணி அதனை எதிர்த்தாடிய புத்தூர் கலாமதி விளையாட்டுக் கழக அணியை மட்டுப்படுத்தப்பட்ட 30 நிமிடங்களுள் 63:50 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றியீட்டியது.

இவ்வாட்டத்திற்கு நடுவராக திரு. ஆ. நவரட்டினம் கடமையாற்றினார்.


யாழ் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடாத்தும்

முழுநிலாநாள் அறிவியலரங்கு

காலம்: 19.09.94-ம் திகதி பிற்பகல் 3.00 மணி

இடம்: பிரார்த்தனை மண்டபம்

கருத்துரை 1: வீரசைவம் - ஓர் அறிமுகம்

வழங்குபவர்: திரு. மா. வேதநாதன்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
இந்துநாகரிகத்துறை
யாழ். பல்கலைக்கழகம்

கருத்துரை 11: இலங்கையில் பாடசாலை அமைப்பு முறை
21-ம் நூற்றாண்டின் எதிர்பார்ப்புக்களும் அறைகூவல்களும்.

வழங்குபவர். திரு. மா. சின்னத்தம்பி
விரிவுரையாளர்,
கல்வியியற்றுறை
யாழ் பல்கலைக்கழகம்

ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

செயலாளர்
யா. இ. க. ப. மா. ச.

(சி-10364)



7-ம் ஆண்டு நினைவஞ்சலி



லெப்டினன்ட் அன்பழகன்
(தேசோமயானந்தம் உத்தமசிகாமணி)

பிறப்பு: 1965 - 05 - 13
வீரச்சாவு: 1987 - 10 - 05

திதி: 1994 - 09 - 18

நித்திய வான் சுடர் போல் - நெஞ்சில்
நீக்கமற நிறைவோனே!
சத்திய வேள்வியின் பால் - சார்ந்தும்
சரித்திரம் படைத்தோனே
வித்தென விருப்புடனே, உயிர் கொடுத்தும்
விருட்சம் தோன்றிட, வழி அமைத்தோனே
உத்தமனே! எங்கள் உள்ளத்தின் நாதமே!
உயரும், மணிக் கொடி - (எழில்) தனை பாரடா!

இவருடன் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களுக்கும் எமது வீரவணக்கத்தைச் செலுத்துகின்றோம்

- குடும்பத்தினர்

சிவகுரு வித்தியாசாலை ஒழுங்கை,
வல்வெட்டித்துறை. (9426)


# இவ்வருட

[illegible] ஆட்டமே என்று போக்கூடிய ஓட்டங்களைக் கட்டவில்லை. என்று ஆசைப்பட்டவர்களும், ஏனையோரும் பட்டுப் படுத்தப்பட்ட போட்டிகளில் ஓரளவுக்கு ஓட்டமும் முக்கியமானது. அதனால் ஓட்டமெடுக்க வேண்டுமென்ற எண்ணமும் திடுக்கிடும் வகையும் அது [illegible]

★ உங்கள் அணியினர் பல வேறு கூறுகளில் துறைகளைச் சார்ந்தவர்கள் எவ்வாறு ஆட்டங்களைச் சமாளித்துக் கொள்கிறார்கள்.

எங்களுக்கு இது ஒருபெரும் பிரச்சினை ஒருவகையில் சொல்லப்போனால் நாங்கள் கிரிக்கெட் ஆடுவதற்காக பிரச்சினைகளை எதிர்நோக்குபவர்கள், யாழ்ப்பாணக் கிரிக்கெட் கழகத்தினர்தான். எமது பயிற்சிகள் போன்று வேறு முன்னிட்டு பல தடவைகள் எல்லாக் கழகங்களும் கால அட்டவணையை பல்முறை மாற்றியிருக்கிறார்கள். இதற்காக அவர்களுக்கு எமது அணியின் சார்பில் நான் பல்முறை நன்றி கூறவேண்டியவனாக என்றே சொல்வேன். பல விடயங்களை நன்கு கலந்துரையாடுவார். ஆககாலத்துல Kccc சுற்றுப் போட்டியில நாங்கள் Runners up ஆக வந்தோம்.

அடுத்தவர் அன்ரன் ராஜகாரியா இவர் மிகக் கடுமையானவரும் மிகத்தீவிரமானவரும் கூட எம்முடன் நன்கு கலந்துரையாடுவார். ஆனால், விளையாட்டென்றால் அதி தீவிரம்தான். இவர் என்னை மிகவும் நேசிப்பவர். இவரின் காலத்தில Kccc சுற்றுப் போட்டி சாம்பியன்களாகவும் டொனால்ட் கிண்ண Runners up ஆகவும் வந்தோம.

அடுத்தவர் விவேகானந்தன் ஒம்ர காலத்தில பல்கலைக் கழகம நுழைந்தோம். எனது சிறந்த நண்பரும் கூட இவர் ஒரு அதிஷ்டம் நிறைந்த தலைவர் ஒருகவர்ச்சிகரமான அணித்தலைவர் தீர்மானங்களைச் சரியாக எடுப்பவர்

★ வழமைக்கு மாறாக இம்முறை நிறையவே கிரிக்கெட் ஆடி விடலர்கள் அல்லவா?

★ உங்களுக்குப் பிடித்த சர்வதேச வரர் அணி?

அசாருதீன். இவர் களத்தில் எப்போதும் தன்னிலை இழப்பதில்லை மிகவும் திறமையான பந்துக் காப்பாளர் விக் கெட்டுகளுக்கிடையில் வேகமாக ஓடுபவர் சாதனைகள் புரிந்தவர் ஆனால களத்தில் மிகவும் சாதாரணமாகக் காணப்படுபவர்.

அணி என்ற வகையில் அவுஸ்திரேலியா. அலன் போடர் வளர்த்தெடுத்த அந்த அணி கூட்டுப் பொறுப்புக்கு ஒரு உதாரணம். திறமையான வீரர்களை நிறையக் கொண்ட அணி.

இதே வேளை உள்ளூரில எனக்கு அகிலனை மிகவும் பிடிக்கும் காரணம் அவரது திறமையும் அதேவேளை மிக இயல்பாகக் காணப்படுகின்ற சாதாரண தன்மையும் ஆகும்

★ இன்றைய யாழ்ப்பாணக் கிரிக்கெட்டிலும் பல பிரச்சினைகள் எதிர்நோக்கப்படுகின்றனவே?

பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். நாம் அவர்களுக்கு முன் மாதிரியாகத் திகழவேண்டும் களத்தில் மிக அவதானமாகவே நடந்து கொள்ள வேண்டும்

★ உங்கள் குடும்பத்தினர் பற்றி.. ...?

எனது தந்தை ஒரு தடகள விளையாட்டு வீரனாக இருந்தவர். நாங்கள் சகோதரர்கள் மூவர். அக்கா தங்கை இருவரும் மெய்வல்லுநர் போட்டிகளில் ஈடுபட்டவர்கள். அக்கா விஞ்ஞான ஆசிரியையாகக் கடமையாற்றிக் கொண்டிருக்கிறார். தங்கை பல்கலைக்கழக அனுமதியை எதிர்நோக்கிக் காத்திருக்கிறார். என்னை நீங்கள் சந்தித்தது அவர்களுக்குப் பெருமிதமாகவே இருக்கும்.

சுதேசன் மிக அடக்கமானவர் அவருடன் உரையாடிய போது, கல்வி பற்றிய கருத்துக்களுக்கே அழுத்தம் கொடுத்தார் எங்கள் சிறார்களின் எதிர்காலம் கல்வியிலேயே தங்கியுள்ளதென்றார். தான் அறிவுரை கூறும் மேதாவியாக இல்லாமல் சில கருத்துக்களைக் கூறும் ஒரு நன் மாணாக்கர் போலவே நடந்துகொண்டார். இவருடைய இவ்வியல்பு இவரின் எதிர்கால சுபீட்சமான வாழ்க்கைக்கும் உதவியாகவே இருக்கும் என்று எண்ணத் தோன்றியது இவருக்கு எமது வாழ்த்துக்களையும் நன்றிகளையும் கூறினோம்.

## யாழ் மாவட்ட

வத்கோலும் விடாதசாதனையை நிலைநாட்டியுள்ளார்.

பல்கலைக்கழக அணித் தலைவன் எஸ். நேரபின் சுரேந்தரனும், உபதலைவன் பி. ராகுலனும் அணியைத் திறமையாக வழிநடாத்தி வெற்றி கொள்ளச் செய்வதில் முன்நின்றனர் பி. ராகு நிலை பந்து காப்பாளர்களாக பரியோவான் கல்லூரி ஹொக்கி அணி வீரனும் பல்கலைக்கழக அணி வீரனுமான வி. கௌரிபாலனும், யாழ்ப்பாணக் கல்லூரி முன்னாள் 1.St Eleven 2nd Eleven ஹொக்கி அணி கப்டன் ஆன எஸ். ரமேஷ் ஆகியோர் மிகச் சிறப்பாக விளையாடியமை

## பொதுவாக கலந்துகொண்ட சகல


1-ம் ஆண்டு நினைவஞ்சலி



நன்று கூறும்வண்டியவனாக இருக்கின்றான்.

★ நீங்கள் பல பயிற்றுநர்களைச் சந்தித்திருப்பீர்கள்......?

இதுவரையில் பல பயிற்றுநர்களிடம் ஆரம்பக்கல்வி பெற்றுள்ளேன். முத்துநிலைக்கல்வி [illegible]. இந்த இருவரையும் நான் [illegible] கூறமுடியும் [illegible]. இவர்கள் இருவரும் [illegible] நான் [illegible] நீங்கள் [illegible] முடியாது. ஒரு உருத்தியான அத்திவாரத்தை [illegible] போட்டு விட்டார். அதன் பின்பு [illegible] கூறும்வண். கிரிக்கெட்டையும் [illegible] [illegible] [illegible] இருவரையும் [illegible] [illegible] முழுமையான [illegible] [illegible] [illegible] [illegible] காரணம் நானல்ல. அவர் தான் இதம்பால் இன்றும் [illegible] வேலையில் கிரிக்கெட் பற்றிய கல்வி பெறுவேன் நான். [illegible] விஞ்ஞானி யாசமான் [illegible]. எந்த வேளையிலும் யாருக்கும் உள்ளிடம் உள்ள கிரிக்கெட் அறிவை முழுமையாகக் கொடுத்துவிடுவார். எதையும் மறைக்கமாட்டார். இதனால் தான் அவருடைய மகனும் மாணவரும் கூட அவருக்கு 91% அடிக்கத் துணிந்து விட்டார்கள் போலும்.

★ நீங்கள் சந்தித்த அணித் தலைவர்கள் பற்றி...?

நான் அனுபவத்தில் சிறிது கூடியவன். கிரிக்கெட் ஆட்டத் தொடங்கியது பல்கலைக்கழகத்தில். இங்கு நான் மூன்று பேருக்குக் கீழ் விளையாடியுள்ளேன். முதலாவது 92இல் கணேஸ் அப்போது நான் முதலாவது வருடம் கணேஸ் எனக்கு ஆசிரியன் மாதிரி

# பொதுவாக கலந்துகொண்ட சகல போட்டிகளும் ‘94

## சர்வகலாசாலை உட்பட

**மொத்த ஓட்டங்கள்: 900 க்கு மேல்**

**சிறப்பான ஆட்டம்: ஜொனியன்ஸ் - சென்றலைட்ஸ் 3நாள் ஆட்டத்தில் பெற்ற 103 ஓட்டங்கள்**

‘93 யாழ். பல்கலைக் கழக விருது சிறந்த சகலதுறை ஆட்டக்காரர்

‘94 -ல் யாழ். பல்கலைக்கழக விருது சிறந்த துடுப்பாட்ட வீரர்

92 -ல் யாழ். பல்கலைக்கழக விருது பெற்றவர் [கலர்ஸ்]

93,94 -ல் இவ் விருது தொடர்ந்து வழங்கப்பட்டது.

ஆமாம். இம்முறை யாழ்ப்பாணத்தில் கிரிக்கெட் கூடி விட்டது என்றே கூறலாம். என்னைப் போன்றவர்களுக்கு இது பெரும் நெருக்கடி. பொதுவாக பாடசாலை மாணவர்கள் கூடுதலாக பங்குபற்றுவதால் அவர்களுக்கும் பெரும் நெருக்கடி. யாழ்ப்பாணத்தில் தொழில்சார் கிரிக்கெட் ஆட முடியாது. அந்த வாய்ப்புகள் இல்லை. பொழுதுபோக்கு, மனநிறைவு என்பதற்காகவே ஆட முடியும். அடுத்து வருவது வாழ்க்கைப்பிரச்சினை. அது படிப்போடு தொடர்புடையது. எனவே கிரிக்கெட் ஆடும் மாணவர்கள் முதலிடம் படிப்பிற்குக் கொடுத்தே மற்றவற்றைப் பற்றிச் சிந்திக்கவேண்டும். படிப்பு மிக மிக முக்கியம். கழகங்களிற்கூட தொடர்ந்து மாணவர்களைக் காண இயலாமல் இருக்கும். அதற்குக் காரணம் அவர்கள் படிப்பிற்கு முன்னுரிமை கொடுப்பதுதான்.

நான் சிறியவன் இது பற்றி அனுபவம் வாய்ந்தவர்கள் கூடி முடிவெடுக்க வேண்டும். சூரி அண்ணா கூறியது போல யாழ்ப்பாணத்தில் Cricket Federation ஒன்று அமைத்தால் பிரச்சினைகள் சூழப்படாமல் உடனடியாக தீர்வு காணப்படக் கூடும் என்பது மட்டும் எனது அபிப்பிராயம்.

★ யாழ் ரசிகர்கள் பற்றி?

மிக அறிவுமிக்க ரசிகர்கள் எதனையும் பகுத்தறிந்து புரிந்துகொள்ளக் கூடியவர்கள். அனேகவேறுபாடில்லாது பல்கலைக்கழக அணிக்கு ஆதரவு தருபவர்கள்.

இன்னொரு வகையினர் சிறுவர்கள் இவர்கள் அப்படியே எங்களை ஆதாரமாகக் கொண்டுவிடுவார்கள். இவர்களுக்கு நாங்கள் முன்னோடியாக இருக்க வேண்டும். நாங்கள் உயர்கல்வி நிறுவனம் ஒன்றுடன் தொடர்பு படுவதால் எம் முரணான செயல்கள் அவர்கள் மனதிலும்

வெற்றி கொள்ளச் செய்வதில் முன்நின்றனர் பி. ராகுலன் மோகக்கி மட்டுமின்றி கூடைப்பந்தாட்டத்திலும் ‘‘கலாஸ்’’ பெற்ற வீரன் ஆவார்: பல்கலைக்கழகத்தின் முன்னிலை வீரர் ஆர். ஜெயசீலனும், வி. சிவகுணனும் ஜி. டி. மதியழகனும் சிறப்பாக ஒவ்வொரு ஆட்டத்திலும் பங்குபற்றியது குறிப்பிடத்தக்கது. நடுநிலையில் வீரர்களாக என். பாக்கிறெஜினோல்ட், கே. சத்தியமூர்த்தி, எஸ். சிவானந்தன் சிறப்பாக விளையாடினர்.

ஹொக்கி அணியின் பின் எஸ். ரமேஷ் ஆகியோர் மிகச் சிறப்பாக விளையாடியமை இவ்வருடம் ஹொக்கிப் போட்டிகளில் பல்கலைக்கழகம் தோல்வி அடையாததற்கு ஒரு காரணமென்று கூறலாம்.

இதேவேளை பல்கலைக்கழக அணியில் ரி. நரேஷ், ஈ. மதியழகன், ஏ. ஜே ஜி. ஜெயசந்திரா, ரி. உதயராஜன், வி. இலங்கநாதன், ரி. சிவசிறி ஆகியோர் குறிப்பிடத்தக்க வீரர்கள் ஆவர் இவ் அணியினருக்கு திரு எஸ். இரட்ணசபாபதி பயிற்றுநராக கடமையாற்றினர்.

## ஜொலிஸ்ரார

அதைப்பயன்படுத்தி அவர் தொடர்ந்து இரண்டு நான்குகளை அடித்துவிட்டார்.

இறுதி ஓவரின் முதலாவது பந்தில் சசிசேகரன் ஆட்டமிழக்கிறார். இப்பொழுது 3 இலக்கு இழப்பிற்கு ஓட்ட எண்ணிக்கை 01 இந்நிலையில் ஒரு பிடிதவறவிடப்படுகிறது. அதனை ஜொலிஸ்ரார ஒரு ரனை ஆக மாற்றுகிறார்கள். இன்னொரு பிடியை சாபரா தவறவிட அதனை ஜொலிஸ்ரார இரண்டு ரன்களாக மாற்றுகிறார்கள். இந்த இரண்டு பிடிகளையும் எடுத்திருந்தால் 3 ரன்கள் ஜொலிஸ்ராருக்குக் குறைந்திருக்கும். அதேவேளை இறுதிப் பந்தில் 3 ஓட்டங்களை வெற்றிக்காகப் பெறவேண்டியிருந்திருக்கும். ஆனால் நன்றாக அடித்து கொடுக்கும் ஒரு சந்தர்ப்பத்தை சாபரா விளா இழந்துவிட்டார்கள். இறுதியில் 5.5 ஓவரில் கப்பலை அடித்து ஒரு ரனுடன் ஜொலிஸ்ரார வெற்றி [illegible] பெற்று கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

# யாழ்ப்பாணம் - நல்லூர், கவின்கலை மன்ற கலந்துரையாடல்

மேற்படி கவின்கலை மன்றத்தின் கலந்துரையாடல் 19-09-1994 திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு, நல்லூர், சட்டநாதர் வீதியில் உள்ள இளங்கலைஞர் மன்றத்தில் நடைபெறவுள்ளது. யாழ்ப்பாணம்-நல்லூர் கோட்டங்களில் பரதத்தையும் மற்றும் கவின்கலை பயிற்றுவிக்கும் சகல ஆசிரியர்களும் தவறாது இக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம். அன்றையதினம் சகலரும் இக் கவின்கலை மன்றத்தில் புதிதாகப் பதிவு செய்து கொள்ளுதல் வேண்டும்.

மாவட்ட நிர்வாக இணைப்பாளர்

(சி-10362)



மேஜர் பிறையநாத (சந்துரன்)

சுதுமலைப் [illegible] (அச்சாகம்)

[முல்லைநகர் வட்டம் [illegible] சிறப்புத்தளபதி [illegible] ஆயுதப்பட்டயணி [illegible] பயிற்சிக்கல்லூரி ஆசிரியனும் [illegible] கல்லூரி [illegible] ஆவார்]

மடியில் முத்தாக 09-07-1971

மண்ணில் வித்தாக 29-09-1993

வண்ணக்கனவுகள் வளரும் வயதினிலே மலர்நெஞ்சம் மண்மீது உலர்ந்ததும்வா கனமூடி நீண்ட துயில் கொள்கின்றாய் கலங்காத நெஞ்சம் கலங்குமே அம்சாகா!

ஏற்றுகின்ற தீபத்தின் ஒளியைப்போல - தமிழ் ஈழத்திற்காய் வாழ்ந்தாயே அசோகா எங்கே சென்றாய் உன்னுடன் களமாடிய வீரமறவர்களை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

- குடும்பத்தினர்

துன்னாலை கிழக்கு,
கரவெட்டி.

(9409)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஆதரவில்

# வாழ்வகம்

## 1,2,3,4,5,6 ஆவது ஆண்டு நிறைவுமலர்

### வாழ்த்துரை

"காணார் கேளார் கா முடப்பட்டோர்
பேணுநர் இல்லோர் பிணிநடுக்குற்றோர்
யாவரும் வருக என்று இசைத்துடன் ஊட்டி"

என்ற பாடலடிகள் மணிமேகலையில் நாம் காணும் அறிவுறுத்தலாகும். எவ்வுயிரும் தன்னுயிர்போல் எண்ணி இரங்கி வாழ்வதையே இறைவனிடம் கேட்டுப் பெற்றனர் அருளாளர்கள் வாழவழியின்றித் தவித்து நிற்போருக்கு புகலிடம் அளித்து ஆதரிப்பதே சிறந்த தானமென்று பேசப்படுகிறது. இதன் பின்பே கோதானம், பூதானம், அன்னதானம் எனபவற்றை இன்றியமையாதவையெனப் பேசமுடியும். இந்தவகையில் உயர்ந்த சேவை மனப்பான்மைகொண்ட நன்மக்களால் உருவாக்கப்பட்டது இவ் வாழ்வகமாகும். சில ஆண்டுகள் தெல்லிப்பழையில் இல்லம் அமைத்து இப்பணி பாராட்டக்கூடிய முறையில் இயங்கி வந்தது. பட்டதாரிகளையும், இசை விற்பன்னர்களையும் இவர்களிடையே தோற்றுவிக்கக் கூடியதாக இருந்ததும் பாராட்டுக்குரியதே. செல்வி அ. சின்னத்தம்பி அவர்கள் தனது முழு நேரப்பணியால் வாழ்வகப் பிள்ளைகளை அரவணைத்து அறிவூட்டி, அக ஒளிக்கு வழிகாட்டிய பெருமைக்குரியவர்.

ஆனால், போர்க்காலச் சூழ்நிலையில் அந்த இடத்தை விட்டு இடம்பெயர்ந்து, தமது பணியை உடுவில் மல்வம் வீதியில் தொடருகின்றமை மிகவும் வரவேற்கத்தக்கதாகும். தன்னலங்கருதாத தருமசீலரையும மனமுவந்து பணியாற்றும் நலன் விரும்பிகளையும் இணைத்து இந் நிறுவனம் செம்மையாக இன்று பணியாற்றிவருவது கண்கூடு. ஆனால், இதற்குரிய சொந்தக் கட்டடம் அமையவேண்டியதும் பராமரிப்புக்கான நிதிப்பற்றாக் குறையை நிவர்த்தி செய்வதுமான பணிகள் எதிர்நோக்கிக்கொண்டிருப்பதையும் நாம் அறிவோம். இவற்றைக் கருத்திற் கொண்டு, கண்ணிழந்தோருடைய ஆசியை நாங்கள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

'பொருள் மிகுத்தவர் பொற்குவைவழங்கியும்
பொருள்குறைந்தவர் காசுகள்வழங்கியும்
அதுமற்றவர் வாய்ச்சொல்வழங்கியும்"

வாழ்வகத்தை வாழவைப்போம் என்று உறுதிபூண்போமாக.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
தலைவர்,
துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

### வெள்ளைப் பிரம்பு

வெள்ளை நிறக் கோல் கையில் தாங்கி வீதிகளில் செல்பவர்களை உங்களிற் பலர் கண்டிருப்பீர்கள், ஆனால் அந்த நபர்பற்றியோ. அல்லது அந்தக் கோலைப் பற்றியோ நீங்கள் சிந்தித்திருக்கமாட்டீர்கள். அத்தகைய கோலைத் தாங்கிச் செல்பவர் கண்பார்வை அற்ற ஒருவர்.

இன்று கண்பார்வையற்றவர்கள் யாருடைய அனுதாபத்தையும் ஆதரவையும் நாடுவது கிடையாது. அறிவுபூர்வமான உதவி ஒத்தாசைகளையே அவர்கள் எதிர்பார்க்கின்றார்கள். தமது காரியங்கள் யாவற்றையும் தாமே செய்து முடிப்பதில் திருப்தி காண்பவர்கள் அவர்கள். இந்தத்தேவைக்காகவேதான்



வாழ்வகத்தின் சிறார்கள்

அந்தக் கோல்தான் "வெள்ளைப்பிரம்பு" என்று அழகாக அழைக்கப்படுகின்றது, சுத்தமான உடைகளை அழகாக அணிந்து கொண்டு வெள்ளைப் பிரம்பினைக் கையில் தாங்கி, தமக்குச் சற்று முன்னால் நீட்டி, வலம் -இடம் என்று தமது இரு பக்கங்களிலும் ஒருவகைத் தாளத்துடன் தட்டித் தட்டிக்

அவர்கள் மற்றையவர்களைப் போல் தனியே நடமாடத் தேவை ஏற்படுகின்றது. அதற்கான வழித்துணையாகவே வெள்ளைப்பிரம்பினை உபயோகிக்கின்றனர் இது இவர்களின் வழிகாட்டியாக மட்டுமன்று இவர்களை அடையாளப்படுத்தும் ஒரு சின்னமாகவும் பயன்படுகின்றது.

வெள்ளைப்பிரம்பு என்பது

மாநிலத்தின் பியோரியா என்ற மாகாண அரசே 'வெள்ளைப்பிரம்பு கண் பார்வையற்றவர்களுக்கான பாதுகாப்பு அவர்களை அடையாளப்படுத்தும் ஒரு சின்னம், என்று பிரகடனப்படுத்தியது. இந்தக் காரியத்தை முதன் முதலில் சாதித்தது அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த "லயன்ஸ்" கழகத்தினரே, என்பது பெருமையுடன் குறிப்பிட வேண்டியதொன்றாகும்.


இந்த அரிமாக்கழகம் ஒரு சர்வதேசக் கழகமாகையால் இவர்களின் மூலம் இந்த விடயம் மிக விரைவில் சர்வதேசங்களிலும் பரவிற்று. பல அரசுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, சட்டபூர்வமாகவும் ஏனைய இடங்களில் சம்பிரதாயபூர்வமாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டதால் இன்று உலகெங்கிலும் வெள்ளைப் பிரம்பு உபயோகத்திலுள்ளது பெருமளவு மக்களுக்கு அறிமுகமாகவும் உள்ளது. எனினும், இன்னமும் மக்கள் இதனை அறியாமலே இருப்பதுகண்பார்வையற்றோர்களுக்கு உதவி ஒத்துழைப்புச் செய்யும் சமுதாயத்தின் பங்கைக்குறைக்கும். ஆதலால்

பல்வேறு வழிகளில் இதனை உலகெங்கிலும் மக்கள் மத்தியில் பகிரங்கப்படுத்திவருகின்றனர் அரிமா கழகத்தினர்.

1969 ஆம் ஆண்டு சர்வதேச விழிப்புலனற்றோர் சம்மேளனம் தனது முதற் கூட்டத்தை இலங்கையிலே கூடிய போது ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதியை சர்வதேச வெள்ளைப்பிரம்புத் தினமா

பிரம்பில் எந்தவித விசேட சக்தியும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. அது மட்டுமன்றி ஒரு வீதியைக் கடக்கும் பொழுது வாகனங்களைத் தடைப்படுத்தி அவர்களுக்கு வழிவிடவும் வெள்ளைப்பிரம்பு சட்டப்படிமாத்திரமன்றி சம்பிரதாயப்படியும் உதவுகின்றது.

விழிப்புலனற்றவரை வழி நடத்தும் இத்தகைய வெள்ளைப் பிரம்புக்கு மதிப்பளிக்க வேண்டும். வெள்ளைபபிரம்பைத்தாங்கி வரும் கண்பார்வையற்றவரைப் பாதுகாக்க வேண்டும் இதற்குச் சட்டம் அவசியமல்ல. மக்கள் பனிதாபிமானப்படி. வெள்ளைபபிரம்பினை அங்கீகரித்தாலன்றி எத்துணைச்சட்டமும் பலனளிக்காது. ஆகையால் வெள்ளைப்பிரம்பை அறிந்து கொண்டு அதற்கு மதிப்பளிப்பதுடன், மற்றவர்களுக்கும் அதன் பெருமைபற்றிக் கூறி அவர்களையும அதனை அங்கீகரிக்கச் செய்ய வேண்டும்.



கண்ணிழந்தாலும் இவர்கள் திறனிழக்கவில்லை

### வாழ்வகம் உங்களை அரவணைக்கின்றது

அன்புப் பெற்றோரே!

விழிப்புல வலுவிழந்த உங்கள் குழந்தைகளை வீட்டிற்குள் முடக்கிவைத்து அவர்களின் வாழ்நாளில் இருளேற்றி விடாதீர்கள். அவர்களின் உள் ஆற்றலை முடக்கி விடாதீர்கள். உங்கள் குழந்தை சமுதாயத்தின் மத்தியிலே எல்லோருடனும் சரிசமனாக வாழ வழி செய்யுங்கள். அவர்களை வாழ்வகத்தில்

## ஆசிச்செய்தி

போர்க்காலம் எம்மில் மறைந்திருக்கும் சக்திகளை மீளவும் வெளிக்கொணர சந்தர்ப்பம் தருகிறது. எமது சமுதாயம் வளரவும், வளம்பெறவும் எம்மவரில் மறைந்திருப்போரையும் மறைக்கப்பட்டிருப்போரையும் நாம் மீளவும் சமூக நீரோட்டத்தில் இணைந்து பங்குகொள்ளவும் பங்களிக்கவும் ஊக்குவிக்க வேண்டும். இத்தகைய சமுதாயச் செல்வங்களில் ஒரு சாரார் பார்வையற்ற நம் சகோதரர் ஆவார்.

பார்வையற்றோரைப் பராமரிப்பது பண்பும் பெருந்தன்மையும் நிறைந்த செயலே. ஆனால் அவர்களைப் பார்த்தும் பாராதிருப்பது சமுதாயத்தின் கண்மூடித்தனமும் மடமையுமாகும். எமது தமிழ்ப்பிரதேசத்தில் ஆயிரக்கணக்கானோர் பார்வையிழந்ததன் காரணமாக அடிமைகளாகவும் ஒடுக்கப்பட்டோராகவும் உரிமைகள் மறுக்கப்பட்டோராகவும், சமுதாயத்திலிருந்து மறைக்கப்பட்டோராகவும் வாழ்கின்றனர்.

பலவிதத்திலும் விடுதலைக்காகப் போராடி கொண்டிருக்கும் நாம் எம்மகத்தே விடுதலையின்றித் தவிப்பவர்களையும், ஏற்புடைமையின்றி ஏங்குபவர்களையும் மறந்துவிட முடியாது. ஒருசமுதாயம் சுதந்திரமாகவும் சுயாதீனமாகவும் வளர அதனகத்தேயுள்ள அத்தனை சக்திகளும் கட்டவிழ்த்துவிடப்பட்டு சுதந்திரமாகச் செயற்படவேண்டியது இன்றியமையாததாகும். பார்வையற்றவர்களின் வாழ்வு, வளர்ச்சி, கல்வி இவைகளைப்பற்றிச் சரியான முற்போக்கான கருத்துக்களை வளர்ப்பதும், அவற்றைச் செயற்படுத்துவதற்குச் சமுதாயத்தின் சக்திகளை ஊக்குவிப்பதும், ஊனக்கண்ணும், உண்மைப்பார்வையும் உள்ளோரின் தட்டிக்கழிக்கமுடியாத கட்டாயக்கடமையெனலாம்.

இத்திசையில் அயரா முயற்சியுடன் பெரும் பணியாற்றும் வாழ்வகத்தின் வளர்ச்சியையிட்டுப்பெருமகிழ்ச்சி. அதன்பணிகள் மென்மேலும் சிறப்புறவும் ''பயனுடையதாக வளரவும் எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

வாருங்கள் மறைந்திருக்கும் மனித சக்திகளை
மலரச்செய்வோம்''

**''வாழ்வகம் வளர எமது ஆசிகள்''**
**அருட்திரு சீ. யோ. இம்மானுவேல்**
இயக்குனர்.

நற்கழக நடுநிலையம்,
115, நாலாம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். (சி - 10366)

கங்களிலும் ஒருவகைத் தாள்யத்துடன் தட்டித் தட்டிக் கம்பீரமாக அவர் நடந்து செல்லும் போது உண்மையிலேயே அவரை நீங்கள் இனங்காண முடியாதுதான். நீங்கள் கற்பனை செய்து வைத்திருக்கும் பழையநிலையிலுள்ள குருடர் அல்ல அவர். போதிய கல்வியறிவும் நிறைந்த பொது அறிவும் உள்ள சுயமாக இயங்கும் திறனும் தற்துணிவும் கொண்டு, ஒதுக்கிவைக்கப்பட்டிருந்த பழைய நிலையில் நின்றும் வெளிவந்து, மற்றையவர்களில் தங்கியிருக்காமல் தாமே தம்மைப் பராமரித்துக் கொள்ளவேண்டுமென்ற சுய கௌரவமும் முயற்சியுமுடையவர். அவர் ஒரு குடும்பத்தையென்ன ஒரு சமுதாயத்தையே வழிநடத்தக் கூடிய அறிவும் தகமையும் உள்ளவர். இன்றைய கண்பார்வையற்றவர்கள் என்பதை அறிந்தால்தான் ஒரு கணம் அவர்களைப்பற்றி நீங்களும் சிந்திக்க முயற்சிப்பீர்கள்.

...யும் பயன்படுகின்றது.

வெள்ளைப்பிரம்பு என்பது வெள்ளை நிறமுள்ள ஒரு நீண்ட கோல். இது உபயோகிக்கும் நபரினது உயரத்திற்கேற்ற ஒரு கணிசமான அளவு நீளத்தையே கொண்டிருக்கும் நடைபாதையில் உபயோகத்தின் பொழுதேதான் இது நீண்டிருக்கும். உபயோகத்தில் இல்லாத வேளையில் இது நாலு துண்டுகளாக மடிக்கப்பட்டே கையில் இருக்கும். எவ்வாறாயினும் இதைக் கையில்வைத்திருப்பவர் கண்பார்வையற்றவர் என்பதை நீங்கள் உறுதியாக அறிந்து கொள்ளலாம். இதனாலேயே கண்பார்வையற்ற ஒருவரின் நடைபாதையின் வழித்துணையாக மட்டுமன்றி எந்த இடத்திலும், எந்த நிலையிலும் இவரை அடையாளப்படுத்தும் சின்னமாகவும் இதுவிளங்குகிறது.


வெள்ளைப் பிரம்பு இவ்வாறு அறிமுகமாக்கப்பட்டது 1930ஆம் ஆண்டிலேயே அமெரிக்காவிலுள்ள இலினொய்

15 ஆம் திகதியை சர்வதேச வெள்ளைப்பிரம்புத் தினமாகப் பிரகடனப்படுத்தியது அன்றிலிருந்து ஒகடோபர் மாதம் 15 ஆம் திகதியை ஒட்டி முன்பின்னாக அந்த வாரம் பூராக சர்வதேசங்களிலும் பெருந் தொகையான

**கா. விஜயராஜசிங்கம்**
பழைய மாணவன்
(பா. கு. ஒ. கல்வித் திட்டம்)

விழிப்புலனற்றோர் பங்குபற்ற லயன்ஸ் கழகத்தினா வெள்ளைப்பிரம்புக்கு வெகு விமரிசையாக விழா எடுத்து வருகின்றனர். இதன் மூலம் ஆண்டு தோறும் சகல பிரதேசத்திலுள்ள பெருமளவு மக்கள் வெள்ளைப்பிரம்பினையும் அதன் உபயோகம்பற்றியும் அறிந்து கொள்கின்றனர்

தனியே நடந்து செல்லும் கண்பார்வையற்ற ஒருவர், வெள்ளைப் பிரம்பினைத் தமக்கு முன்னால் நீட்டி (சுமார் ஒன்று அல்லது ஒன்றரை அல் தூரத்தில்) வலம் இடம் ஆகிய இரு மருங்கிலும் தட்டித் தட்டிச் செல்லும் போது முன்னால் உள்ள எத்தகைய தடையையும் அந்த தட்டின் போது அறிந்து கொள்வார். அப்போது விழிப்புலனற்றவர் தடையை விலகிச் செல்வது இலகுவாகிறது. இத்தடைகள் யாவும் சத்தம், தொடுகைப் புலன்கள் மூலமே உணரப்படும். அன்றி வெள்ளைப்



விழிப்புலனற்றோரின் செயற்பாடுகள்

செய்யுங்கள். அவர்களை வாழ்வகத்தில் இணைத்து ஒளியேற்றுங்கள். உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்.

**தமிழர் புனர்வாழ்வுக் கழகம்**
நடுவப் பணியகம்,
கே. கே எஸ். வீதி,
கொக்குவில்.

## அளப்பரிய சாதனை

'வாழ்வகம்' என்ற சொல் ஆழமான இருகருத்துக்களைக் கொண்டது. ஒன்று வாழ்வளிக்கும் மனங்கள், மற்றது வாழ்வளிக்கின்ற இல்லங்கள். இந்த இரண்டு கருத்துக்களை உற்றுநோக்குகின்றபோது, வாழ்வளிக்கின்றநல்லவர்களமனம் வைக்கும்போதுதான். வாழ்வுபெறவேண்டியவர்கள் அகம் மகிழ்ந்து வாழமுடியும். எனவே பல நல்ல மனங்கள் அதாவது அகங்கள் ஒன்றிணைந்து. இந்த வாழ்வுதருகின்ற அகத்தை, வாழ்வகத்தை உருவாக்கியிருப்பது பொருத்தமானதும், பெருமையானதும், அர்த்தமுள்ளதும் ஆகும.

மானிடப்பிறவியின் மகத்துவம், அவனது இருவிழிகள் மூலமாகவே எட்டப்படுகிறது. உலக அனுபவங்களையும்' அனுபவத்தின் ஊடாக வளர்ச்சிகளையும் பெற்றுக்கொள்ள முதற் துணையாவது கண்கள். விஞ்ஞான ஆய்வுகளுக்கெல்லாம் முன்னோடியாக அமைந்தது அவர்கள்கண்களால கண்ட காட்சிகளே உதாரணமாக அப்பிள்பழம் ஒன்று மரத்தில் இருந்து கீழே விழுவதை, தன் கண்களால் கண்டமையே ஐசக் நியூட்டனின் புவியீர்ப்பு சக்தியைக் கண்டு பிடிப்பதற்கு அடிகோலியது. எனவே, இத்தகைய உயர் உறுப்பான கண்களை, கண்பார்வையை இயற்கையாகவோ அல்லது செயற்கையாகவோ இழந்தவர்களுக்கு அவர்களின் அகக்கண்ணூடாகப் புதிய வாழ்வை அளிக்கின்ற இந்த வாழ்வகத்தின் பணிபல்லாண்டு காலம் வாழ்ந்து வளம் பெற வேண்டிய ஒன்றாகும்.

கட்புலனற்றவர்கள் இன்று பல்வேறு துறைகளில். அறிவியல் விஞ்ஞானரீதியாக அபார வளர்ச்சியைக் காட்டுவதும் அளப்பரிய சாதனைகளைப் புரிந்துவருவதும் எம்மில் பலருக்கு இன்னும் தெரியாது. அவர்கள் தமது ஏனைய புலன் உணர்வுகளைக்கொண்டு மற்றவர்களைவிட பலவிடயங்களை நுணுக்கமாகவும் துல்லியமாகவும் தெரிந்துகொண்டு செய்கின்றார்கள்.

இவ்வாறானவர்களின் ஆற்றலையும் திறமையையும் வளம்படுத்துவதற்கு இன்றைய சூழ்நிலைகளும் கல்வி பொருளாதாரத்தடைகளும் பெரும் தடைக் கற்களாகவுள்ளன. இவ்வாறான தடைகளையெல்லாம் ஓரளவாவது நிவர்த்தி செய்யுமுகமாக காலநேரம் பாராது, தம்மை அர்ப்பணித்துச்சேவை செய்கின்ற செல்வி அ.சின்னத்தம்பிபோன்றவர்களின் மனப்பாங்கு போற்றப்படவேண்டிய ஒன்றாகும்

நாமும் இந்தத் தூய பணிவாழ்வைப் பின்பற்றி எம்மால் இயன்றவரை உதவுவது இன்றைய தேவையென்பதையும், அதுவே இறைவனுககு உகந்ததுமாகும் என்தையும உணர்ந்து செயற்படுவோமாக.

**திருமதி வே. எம். சிவப்பிரகாசம்**
ஊனமுற்றோர் புனர்வாழ்வுக் கழகம்

உ

ஸ்ரீராம ஜெயம்

யாழ். வடமராட்சி

# ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய மகோற்சவ

# தேர், தீர்த்த சிறப்பு மலர்

## 18-09-1994 தேர்

## 19-09-1994 சமுத்திர தீர்த்தம்

## 20-09-1994 கேணித்தீர்த்தம்

மலர் சிறக்க மனமுவந்தவர்கள்

''காக்கும் கடவுள் கண்ணன்
இன்று தேரில் வருகின்றான்''

ராகுல சூரியன்ஸ்

புடவை மாளிகை

பிரதானவிதி, பருத்தித்துறை.

படிப்பதற்கு கீதை சொன்ன கண்ணன்
இன்று தேரில் வருகின்றான்

''ஓம் நமோ நாராயண''

ராஜன் சையிக்கிள் வேக்ஸ்

சையிக்கிள் உதிரிப்பாக
விற்பனையாளர்கள்

பிரதான வீதி, பருத்தித்துறை

நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு

ஜெயாஸ் நகை மாளிகை


443, பிரதான வீதி, பருத்தித்துறை.

சிந்துயா நகை மாளிகை

### "கீதை சொன்ன கண்ணன் இன்று வண்ணத் தேரில் வருகிறான்"

ஈழவள நாட்டின் சிகரமாய் விளங்கும் யாழ் குடா நாட்டின் வடமுனையில் எழுவான் திசையில் ஸ்ரீதேவி பூதேவி சமேத மகா விஸ்ணுமூர்த்தி கோயில் கொண்டுள்ள இத் தலமானது மூலஸ்தான மூர்த்தி சக்கரமாகவும், தலம் வல்லிபுரமாகவும், இவ் ஆலயத்தின் மகோற்சவ காலம் புரட்டாசி மாதம் வரும் பௌர்ணமியில் தீர்த்தம் மச்ச அவதாரம் எடுத்த வங்காள விரிகுடாவாகவும், இப்புண்ணிய தலத்தில் ஸ்ரீவல்லிபுரேசன் தேரேறி வரும் திருநாளில் அடியார்கள் கோபாலா போரேறே கோவிந்தா நீயன்றி மா போரை அழிக்க வல்லவர் யார் என்று அபயக்குரல் எழுப்பும் பெருநாள் காக்கும் கடவுளாம் உக்கிர மூர்த்தியாம் ஸ்ரீமன் நாராயணன் இன்று தேரில் வரும் திருக்காட்சியைக் கண்டு பனித்து மெய்சிலிர்த்து, கீதை சொன்ன கண்ணன் வண்ணத்தேரில் வருகின்றான் என்று பாடிய பக்தர்கள் ஆண்டாண்டு தோறும் ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயதேர் உற்சவ நாளில் பேரின்பவுணர்வு பெற்று திளைக்கின்றார்கள் அடுத்த நாள் சக்கரதாரி பாற்சமுத்திரத்தில் தீர்த்தமாடுவான் எங்கள் பாவங்களை பார்த்தசாரதி நீக்கி விட்டான்.

வினைகள் நீறாக்கி விட்டான். நாம் புனித நீராடுவோம் தீர்த்தோம் தீர்த்தோம் பாண்டுரங்கன் ஆடிய நீரில் நாமும் நீராடுவோம் வினைகள் தீர்த்தோம், ஸ்ரீ வல்லிபுரநாதன் தேரேறும், நாளும் தீர்த்தமாடும் நாளும் நம் வாழ்க்கையில் பெறற்கரிய புண்ணிய நாட்கள் பிறவி எடுத்தால் பெரும் பயனை இவ்விரு தினங்களிலும் பெறுகின்றோம். ஸ்ரீ. மத்நாராயணன் துட்ட நிக்கிரகசிஷ்ட பரிபாலனம் செய்ய பல அவதாரங்களை எடுத்துள்ளார். அதற்காகவே ஒரு நாள் பாற் சமுத்திரத்தில் மீனாக அவதரித்தார். சமுத்திரம் கலங்கியது. கொந்தளித்தது கடலோரமாக வாழ்ந்த கடலோடிகள் மீனைப் பிடிக்க முயன்றனர். அவர்கள் சென்ற மரக்கலங்கள்



ச.தேவதாசன் B. A (Cey)

பார்த்தனுக்கு பாடம் சொன்ன
கீர்த்தன் இன்று பார்த்தசாரதியாக
தேரில் வருகின்றான் இந்நாளில்

தரமான பாண், பணிஸ்
தயாரிப்பாளர்கள்

சிற்றி வெதுப்பகம்

துப்பளை, பருத்தித்துறை.

'அதர்மம் எங்கே தாண்டவம் ஆடுகிறதோ
அங்கே அவதாரம் எடுப்பேன் என்ற
கண்ணன் இன்று தேரில்'

''தேனருவி''

பிரதான விதி, பருத்தித்துறை

தீன்சுவை வெதுப்பகம்

இறங்குதுறை வீதி, பருத்தித்துறை.

பன்னீர் மழை சொரியும்மேகங்களேஇன்று
பரந்தாமன் மெய் அழகை பாடுங்களே

''புதிய இதயன்'' அழகு மாடம்

மெயின்வீதி, நெல்லியடி.



**ச.தேவதாசன் B. A (Cey)**
(தர்மகர்த்தா)

நீரினுள் அமிழ்ந்தன கரையோரமாக பெருந்திரளாக மக்கள் நாராயணன் புகழ் பாடி நின்றனர் லவல்லி எனும் பெயருடைய சிறந்த சன்னியொருத்தி வைசிய குலத்தில் பிறந்து முன்பு செய்த தவப்பயனாக அந்தப் பயங்கரமான பெரிய மீனாக கடல் கலக்கிய மச்சவதாரி சிறிய உருவில் அவள் மடியில் வீழ்ந்து குழந்தையாக மாறினான் அவள்புனிதையானாள் அவளுக்கிருந்த நாகசாபம் நீக்கியதுபின்புசக்கரவடிவமாக மாறியவனை பல்லக்கில் வைத்து அவ்வூர் சற்கோவளம் கப்பல் ஒட்டிகள் காவி வந்தனர் கோவிந்தன் பல்லக்கில் இருந்து கீழே விழுந்து, புலோலி, துன்னாலை, வராத்துப்பளை, கற்கோவளம் என்னும்கிராமங்களுக்குஇடையில் ஸ்ரீ. வல்லிபுரத்தையே தனது திருநகராக்கினான் அங்கே தன்னைத்தானே பிரதிட்டை செய்தான் அந்தப் புனித நாட்களே தேரேறும் நாளாகவும் தீர்த்தமாடும் நாளாகவும் கொண்டாடப்பட்டு வருகின்றன தேரேறும் திருமாலுக்கு மங்கள தீர்த்தமாடி, வினைதீர்க்கும் திருமகள் நாயகனுக்கு மங்களம் ஸ்ரீவல்லிபுரேசனுக்கு மங்களம்,

''வாக்காலும் மனத்தாலும் அறியப்படாதவரும் வேத முடிவின் பொருளானவரும் உலகத்திற்கோர்முதல்வனாம் ஞானவடிவினருக்கும்மங்களம்

## ஆசியுரை

ஓம் நமோ நாராயணா

காத்தற் கடவுளாம் ஸ்ரீமத் நாராயணனின் வருடாந்த மகோற்சவம் மிகச் சிறப்பாக இவ்வாண்டு நடைபெற்று வருகின்றது இதன் சிறப்பு அம்சமான தேர், தீர்த்தத் திருவிழாக்களாகும். மச்ச அவதாரமாக சமுத்திரத்தில் தோன்றிய வல்லிபுர மாயவனை ஆண்டுதோறும் நினைத்து பல்லாயிரம் பக்தர்கள் சமுத்திரக் கரையில் திரண்டு வந்து ஸ்ரீ சக்கர வடிவான எம்பெருமானை தரிசித்து தங்கள் துன்பங்களை துடைத்துக் கொள்வார்கள். இப்புனித நாளிலே எல்லாம் வல்ல ஸ்ரீமத் நாராயணமூர்த்தியின் சக்கராயுதத்தை வழிபட்டு பக்தகோடிகளுக்குளமது உளப் பூர்வமான நல்லாசிகளைகூறிக்கொள்வதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றோம்.

''கீதை சொன்ன கண்ணன் வண்ண தேரில் வருகிறான்''

மேற்படி ஆலய பிரதான குருமார்கள்
ச. க. சுதர்சனக் குருக்கள்
ச. க. புருசோத்தம குருக்கள்


**சிந்துயா நகை மாளிகை**
பிரதானவிதி, பருத்தித்துறை.

''நம்பினார் கெடுவதில்லை நான்குமறை தீர்ப்பு பசிக்கு விருந்தாவான் நோய்க்கு மருந்தாவான் பரந்தாமன் சன்னிதிக்கு வாராய் கண்ணா''

**வினோ நகை மாளிகை**
பிரதான, விதி பருத்தித்துறை.

**லக்ஸ்மி நகை மாளிகை**
பிரதான விதி, பருத்தித்துறை.

**வாணி நகைமாளிகை**
பிரதான விதி, பருத்தித்துறை.

பாஞ்சாலி புகழ்காக்க தன் கை கொடுத்தான். அன்று பாரதப்போர்தொடுக்க சங்கை எடுத்தான் பாண்டவர்க்கு உரிமையுள்ள பங்கை கொடுத்த கண்ணன், இன்று தேரில் வருகிறான்.

**சிவகௌரி நகை மாளிகை**
பிரதான விதி, பருத்தித்துறை.

உன் ஆனந்த மோகன மேவுகானத்தில் அலைபாயுதே கண்ணா என்மனம் அலைபாயுதே''

**லிங்கம் கிறீம் ஹவுஸ்**
ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

காப்பதற்கு கையிலேந்து சங்கு சக்கரம் தாங்கிய கண்ணன் இன்று தேரில் வருகிறான்

**றியோ கிறீம் ஹவுஸ்**
(ஐஸ்கிறீம் தயாரிப்பாளர்கள்)
பாங்சால் வீதி, யாழ்ப்பாணம்.

கண்ணா உனது !
நீலமேனி கோலம் காண
கண்கள் மறுக்குமோ.
உனது திருநாள் இன்று.

**சிவா ரேடிங் கோ**
பஸ்நிலையம், பருத்தித்துறை.

''எங்கு நோக்கிலும் என்ன கேட்கிலும் என்னைக் காணலாம் என்றாய், நாங்கள் ஒன்று நோக்கினோம் ஒன்று கேட்கினோம் உன்னைக் காணலாம்''

**குலம் கிறீம் ஹவுஸ்**
ஆலடிச்சந்தி, மானிப்பாய்.

சகல விதமான பாட்டா வகைகளுக்கு

**'மலர்ஸ் பாத அணி' வியாபாரம்**
மெயின் வீதி, நெல்லியடி

**சிவகுமாரன் புடவை மாளிகை**
பிரதான வீதி, பருத்தித்துறை

''கண்ணா கண்ணா என்றதும் ஓடியே வருவாய் வல்லிபுரக் கண்ணன்'' இன்று ரதோற்சவ நாளில் வருவான்

**சுசிலா ஆபரண மாளிகை**
தங்கநகை வியாபாரம்
பிரதான வீதி, பருத்தித்துறை

**வே. மனோகரன்**
மிதிவண்டி உதிரிப்பாக வாணிபம்
மந்திகை, புலோலி

சிறந்த படப்பிடிப்பாளர்கள்

**குகன் ஸ்ருடியோ**
இறங்குதுறை வீதி, பருத்தித்துறை


மலர் தயாரிப்பு - தொண்டர்கள்
(ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயம்)

(சி-10353)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளைநூலகம்.

### சிந்தனைக்கு..

நம் இயல்பைக் கெடுக்க நாமே முனைப்பான முயற்சிகள் பல மேற்கொள்ளாவிடில், நம் இயல்பு ஒருபோதும் நம்மைக் கெடுக்காது.

- எட்வர்ட் கிளேரெண்டன்

ஈழநாதம்

81, மகேந்திரா வீதி. யாழ்ப்பாணம். 18-09 1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால்பெட்டி எண்- 05

## ஜனாதிபதித் தேர்தல் திகதி அறிவிப்பு

எவ்வளவு விரைவில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தி விடமுடியுமோ அந்தளவு விரைவில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தி முடித்துவிட டி. பி. விஜேதுங்கா முடிவு செய்துவிட்டார். இதன் வெளிப்பாடே நவம்பர் 9ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் என்ற அறிவிப்பாகும். அதாவது சில வாரங்கள் தேர்தலைப் பிற்போடக் கூடியதாக இருந்தும் அவர் அதை விரும்பவில்லை போல் உள்ளது.

பொதுத்தேர்தலில் தோல்வி அடைந்தபின்னர் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா புதிய அரசாங்கத்துடன் முரண்பட்டுக் கொள்ள விரும்பாது விட்டாலும் ஜனாதிபதி தேர்தலை சற்று தாமதப்படுத்தியிருக்க முடியும். ஆனால் அவர் அவ்வாறானதொரு முடிவை எடுக்க விரும்பவில்லைப் போல் தெரிகிறது. இதற்கு ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் கொடுத்த அழுத்தத்தை விட, ஐக்கிய தேசியக் கட்சி உள்ளும் புறமும் எதிர்நோக்கும் நெருக்கடியே காரணமாகும். இதுவே எவ்வளவு விரைவில் தேர்தலை நடத்திவிடமுடியுமோ அவ்வளவு விரைவில் தேர்தலை நடத்திவிட டி பி விஜேதுங்காவை தூண்டியுள்ளதும் எனலாம்.

ஜனாதிபதித் தேர்தலில் ஐ. தே. கட்சியின் தோல்வியானது தற்பொழுதே உறுதி செய்யப்பட்டதொன்று என்றே அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றார்கள். இந்நிலையில் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தேர்தல் காலத்தை நிர்ணயிப்பதென்பது, ஐ. தே. கவின் தோல்வியின் அளவை மட்டுப்படுத்துவதற்காகவே ஒழிய வேறு எதுவுமில்லை என்றே கூறலாம்.

ஏனெனில், காலம் செல்லச் செல்ல கடந்த 17 வருட காலத்தில் ஐ. தே. கட்சி நடத்திய ஊழல் / மோசடி மற்றும் மனித உரிமை மீறல் தொடர்பான விடயங்கள் பூதாகரமாக உருவெடுக்கும் என்றே நம்பப்படுகின்றது. அதனை உறுதிப்படுத்துமாப் போன்ற

## ஐ. தே. கவின் கிளைகளுக்கு உயிர் ஊட்ட வேண்டும்

- ரொனி டி மெல்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தல்களுக்கு முகம் கொடுப்பதற்காக இப்போதிருந்தே ஐக்கிய தேசிய கட்சியின் கிளைகளுக்கு உயிரூட்டவேண்டி இருக்கிறது. இவ்வாறு மாத்தறை மாவட்ட ஐ தே. க பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் நிதி அமைச்சருமான ரொனி டி. மெல் தெரிவித்தார்.

வெலிகம பகுதியில் ஐ தே க உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் மத்தியில் பேசிய ரொனி. டி. மெல் மேலும் கூறுகையில், ஐ தே. க வின் அமைப்புச் சக்தியில் ஏற்பட்டுள்ள குறைபாடுகளும், பலவீனங்களும் தான் கட்சி இம்முறை தோல்வியுற்றமைக்கு காரணமாகும். இதனை நாம் நன்கு உணர்ந்துள்ளோம்.

பொதுஜன ஐக்கிய முன்னணி இன்றைய பிரதமரை ஜனாதிபதி தேர்தலுக்கு நிறுத்தினால் ஐ தே. க தேர்தல் களத்தில் பெரும் போராட்டங்களை எதிர் கொள்ள நேரிடும். தென் மாகாண சபை தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல்களின் போது வீசிய அலை ஜனாதிபதி தேர்தலிலும் பொது ஜன ஐக்கிய முன்னணிக்கு சார்பாக வீசவிடாது தடுக்க ஐ. தே. க தனது செயற்திட்டங்களை துரிதமாக்க வேண்டும். எனவும் கேட்டுக் கொண்டார்.

## ஆணைக்குழு அமைப்பு ஆவணம் ஜனாதிபதி கவனத்திற்கு வரவில்லை

ஜனாதிபதி செயலகம் தெரிவிப்பு

(கொழும்பு)

தமது விருப்பத்திற்கு மாறாக அகற்றப்பட்டவர்கள் மற்றும் காணாமற் போனவர்கள் தொடர்பாக ஆராய ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நியமிக்கவேண்டுமென கோரும் ஆவணங்கள் எவையும் அரசாங்கத்தினால் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவரப்படவில்லை இவ்வாறு ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய ஆணைக்குழு ஒன்றை அமைப்பது தொடர்பாக ஜனாதிபதி எதிர்ப்பு தெரிவித்துள்ளார் என்று வெளியிடப்பட்ட செய்தியை மறுதலிக்கும் முகமாக ஜனாதிபதி செயலகம் இவ் அறிக்கையை வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

எனினும், விருப்பத்திற்கு மாறாக அகற்றப்பட்டவர்கள் மற்றும் காணாமற்போனவர்கள் தொடர்பாக ஆராய ஒரு ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டு அது 1992 ஜனவரி முதல் செயற்பட்டு வருவதாலும், வாக்குகளுக்கு மேலாக வேட்டுக்கள் ஆட்சி செலுத்தி சட்டமும், ஒழுங்கும் சீர்குலைந்து குழப்பகரமான நிலவிய சூழ்நிலையில் நிகழ்ந்தசம்பவங்களைபற்றி ஆராய்ந்ததுபொருத்தமற்றது என்பதாலும் மற்றும் இது போன்ற சில காரணங்களாலும் இத்தகைய ஜனாதிபதி ஆணைக்குழு அமைப்பதில் ஜனாதிபதி ஆர்வம் காட்டவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 480 ஆரம்ப ஆசிரியர்களுக்கு வலயம் 1 இல் வெற்றிடம்

(யாழ்ப்பாணம்)

யாழ் கல்வித் திணைக்கள வலயம் ஒன்று பகுதியில் நானூற்றி எண்பது ஆரம்ப ஆசிரிய வெற்றிடங்கள் இதுவரை நிரப்பப்படாமல் இருக்கின்றன.

யாழ் கல்வித் திணைக்களத்தின் வலயம் ஒன்று பகுதியில் ஆரம்பக்கல்வியை கற்பிக்க ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் ஆரம்ப ஆசிரியர்களாக நியமனம் பெற்றவர்களில் அநேகமானவர்கள் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு சென்றுள்ளதாலும் பலர் மேற்படிப்பைதொடர்ந்துள்ளதாலும் ஆரம்ப ஆசிரியர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

(88, ச தி)

## ஆண்டுமலர் வெளியீட்டு விழா

நங்கூரம் சமூக அறிவியல் ஏட்டின் இரண்டாவது ஆண்டு மலர் வெளியீட்டு நிகழ்ச்சி நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற உள்ள இந்நிகழ்ச்சியில் மலர் வெளியீடும், பரிசளிப்பு வைபவமும் திரு எஸ் திலகநாயகம் போல் என்பவருடைய தமிழிசைமழை இசை நிகழ்ச்சியும் நடைபெறும்.

## பாடசாலை புனரமைப்பில் கல்வித்திணைக்களம் தீவிரம்

(யாழ்ப்பாணம்)

தீது உருவதால் இவ்வாறான

## விபத்தில் இளைஞன் காயம்

(யாழ்ப்பாணம்)

குறுக்கும் நெடுக்குமாக வந்த மோட்டார் சைக்கிளும் சைக்கிளும் மோதிக் கொண்

## தியாகி திலீபன் நினைவு உண்ணாவிரத நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

தியாகி லெப். கேணல் திலீபனின் 7 ஆம் ஆண்டு நினைவு நாட்களின் நான்காம் நாள் உண்ணாவிரத நிகழ்வுகள் இன்று யாழ்குடா நாடெங்கும் நடைபெறவுள்ளன.

இந் நிகழ்வுகளில் வலிகாமம் கோட்டத்தில் உடுவில் வட்டத்தில் சுண்ணாகம் சிவன் கோவிலடியில் கலைவாணி ச ச. நிலையம், காந்தரூபன் ச ச நிலையம், சுண்ணாகம் மாதிரி குடியிருப்பு என்பனவும், சங்கானை வட்டத்தில் வடக்கம்பரை அம்மன் கோவிலடியில், வலிமேற்கு வர்த்தகர் சங்கமும், சண்டிலிப்பாய் வட்டத்தில் ஆனைக்கோட்டை மூத்த விநாயகர் கோவிலடியில், சண்டிலிப்பாய் சிற்றூர் மக்களும், கோப்பாய் வட்டத்தில் நீர்வேலி சந்தசுவாமி கோவில் முன்றலில், கோப்பாய் மகாவித்தியாலயம், சரவணபவானந்தா கல்லூரி, கோப்பாய் தெற்கு ஆர். சி பாடசாலை, பூதர்மடம் அ. த. க. பாடசாலை, தையல் நிலையம், தெ. ப. பொ கூ- சங்கம், ச- ச- நிலையங்கள் என்பனவும், யாழ், நல்லூர் வட்டத்தில் நல்லூர் கந்தசாமி கோவிலடியிலும் உண்ணாவிரத நிகழ்வுகள் இடம்பெறும்.

வடமராட்சிக் கோட்டத்தில் பருத்தித்துறை வட்டத்தில் மந்திகை அம்மன் கோவிலடியில், பருத்தித்துறை ப- நோ- கூ- சங்கமும், கரவெட்டி வட்டத்தில் துன்னாலை கலிகைக் கந்தன் ஆலயத்தில் சதாபொன்ஸ் கல்வி நிறுவனம், நெல்லியடி தொழிலாளர் சங்கம் என்பனவும், உடுப்பிட்டி வட்டத்தில் நாவலடி வைரவர் கோவிலடியில், பிக்கொம் தனியார் கல்வி நிறுவனம், வல்வெட்டி ச- ச- நிலையம், தர்மகுலசிங்கம் ச- ச- நிலையம், கருணாநிதி ச- ச- நிலையம், தென்னவன் ச- ச- நிலையம், அச்சுவேலி சிற்றூர் மக்களும் கலந்து கொள்வர்.

தென்மராட்சிக் கோட்டத்தில் கைதடி வட்டத்தில், கைதடிச் சந்தியில் குமாரநகர் ச-ச- நிலையம், உதயசூரியன் ச-ச- நிலையம் என்பனவும், சாவகச்சேரி வட்டத்தில் மணங்குணாப் பிள்ளையார் கோவிலடியில், சாவாநகர் வணிகர் மன்றமும், கொடிகாமம் வட்டத்தில், 190-ம் கட்டை புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் நாவலர் சனசமூக நிலையம், வர்த்தகர் சங்கம், தெ- ப- பொ- கூ- சங்கம், கொடிகாமம் ப-நோ- கூ- சங்கம் என்பனவும், பளை வட்டத்தில் இரட்டைக்கேணி அம்மன் கோவிலடியில் வேம்பொடுகேணி, கச்சார்வெளி மக்களும் தென்னந்தோட்ட ஊழியர்களும் கலந்து கொள்வர்.

தீவகக் கோட்டத்தில் அலையாலை நாச்சிமார் கோவிலடியில், வேலணை ப-நோ- கூ- சங்கம், யாழ்- முஸ்லிம் பகுதி என்பனவும் கலந்து கொள்ளும்.

கடற்புலிகளின் பிரதேசங்களில் அராலியிலும், வல்வெட்டித்துறை அம்மன் கோவிலடியிலும், ராஜன் நகரிலும் வடமராட்சி கிழக்கு தனிப்பனை முகாமிலும், நாகர் கோவிலிலும் உண்ணாவிரத நிகழ்வுகள் நடைபெறும்.

## உண்ணாவிரத பந்தல்களில் இரவுநேர கலை நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

தியாகி லெப். கேணல் திலீபனின் 7ஆம் ஆண்டு நினைவு நாட்களில், வட்ட ரீதியாக உண்ணாவிரத பந்தல்களில் இன்று இரவு கலை நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

உடுவில் வட்டத்தில் தவில், நாதஸ்வரம், பேச்சு, மரணத்தை வென்றவர்கள் (இசை நாடகம்), கரகம், கும்மி என்பனவும், சங்கானை வட்டத்தில் தவில், நாதஸ்வரம், தமிழ்மண் (நாடகம்), மீனவ நடனம் என்பனவும், சண்டிலிப்பாய் வட்டத்தில் பட்டிமன்றம், பேச்சு, சமாதியல்ல சந்நிதி (நாடகம்), கும்மி என்பனவும். கோப்பாய் வட்டத்தில் கவியரங்கு. விடிவிற்காய் பசமுடிவு (நாடகம்), கிராமிய நடனம், கும்மி என்பனவும், உடுப்பிட்டி வட்டத்தில் பேச்சு, கோலாட்டம், கும்மி, தூரம் அதிகமில்லை (நாடகம்), என்பனவும், பருத்தித்துறை வட்டத்தில் பேச்சு, கலைஞனின் தாகம் (நாடகம்), கும்மி, கோலாட்டம் என்பனவும், கரவெட்டி வட்டத்தில் தர்மதேவதை (நாடகம்) கும்மி, கோலாட்டம் என்பனவும் கைதடி வட்டத்தில், பேச்சு, கயிற்றுக்காவடி, புதிதாய் எழுவோம் (நாடகம்), கரகம், சாவகச்சேரி வட்டத்தில் பேச்சு, கரகம், கோலாட்டம், புலரும்பொழுது (நாடகம்), கொடிகாமம் வட்டத்தில் பேச்சு, வயலின் இசை,

மோசடி மற்றும் மனித உரிமை மீறல் தொடர்பான விடயங்கள் பூதாகரமாக உருவெடுக்கும் என்றே நம்பப்படுகின்றது. அதனை உறுதிப்படுத்துமாப் போன்றே வெளிவந்து கொண்டிருக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கு ஏற்றாற்போல் பொதுஜன ஐக்கிய முன்னணி தனது கடந்த ஒரு மாத கால ஆட்சியில் ஐ.தே.க புரிந்த ஊழல் / மோசடி பற்றிய விபரங்களையும், அவர்கள் வாழ்ந்த ஆடம்பரமான வாழ்க்கை மற்றும் அவர்கள் சேர்த்துக் கொண்ட சொத்துக்களின் விபரங்களை வெளியிடுவதிலேயே அக்கறை காட்டுகின்றது. இந்த வகையில் பிரசார நடவடிக்கைகளையும் முடுக்கி விட்டுள்ளது.

எடுத்துக்காட்டாக வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஆடம்பரக் கார்கள் மற்றும் சொகுசு வாகனங்கள் என்பவற்றின் தகவல்களை வெளியிடுவதிலும் பிரசாரப்படுத்துவதிலும் புதிய அரசாங்கம் குறியாகச் செயற்படுகின்றது. அத்தோடு அமைச்சுக் காரியாலயத்தில் அமைச்சர்கள் அனுபவித்த சுகபோகங்களை வெளியிடும் வகையில், பிரசாரங்கள் முடுக்கி விடப்பட்டுள்ளன. அண்மையில் அமைச்சு அலுவலகம் ஒன்றில் அமைச்சர் தனது பிரத்தியேகப் பாவனைக்கென பயன்படுத்திய படுக்கை, தொலைக்காட்சி போன்றவற்றை மற்றும் ஆடம்பர வாழ்வுக்கான பொருள்களை தொலைக்காட்சியில் காட்டியும், அவற்றை அம்பலப்படுத்தியும் புதிய வகை பிரசாரங்களை புதிய அரசாங்கம் மேற்கொண்டது.

இதேசமயம் புதிய அரசாங்கம் நியமித்துவரும் விசாரணைக் குழுக்களின் முன் ஐ.தே.கவின் சிரேஷ்ட உறுப்பினர்கள், முன்னாள் அமைச்சர்கள் பல கேள்விகளுக்குப் பதிலிறுக்க வேண்டிய நிலையும் உருவாகி வருகின்றது. இந்நிலையில் பலரது மோசடிகள் / ஊழல்கள் எதிர்காலத்தில் அம்பலமாகக் கூடும். இவ் விசாரணைகளில் ஐ.தே.க. ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற படுகொலைகள் தொடர்பான விடயங்களும் வெளிவரலாம். அதற்கு ஏற்றால் போல், எம்பிலிப்பிட்டிய மாணவர் படுகொலை தொடர்பான விடயத்திலும் புதிய அரசாங்கம் அக்கறை காட்டுகின்றது.

இந்நிலையில்தான், தோல்வியை எதிர்பார்த்துள்ள ஐ.தே.க. மேலும் அந்நியப்பட்டு, அவமானப்பட்டு படுதோல்வி அடையும் நிலை ஏற்படும் முன்னர் தேர்தலை நடத்தி கௌரவமானதொரு தோல்வியை ஏற்றுக் கொள்வதே டி.பி. விஜேதுங்காவின் நோக்கமாகும். இதுவே ஜனாதிபதி தேர்தலுக்கான திகதி காலதாமதமின்றி அறிவிக்கப்பட்டதற்கு காரணம் என்று கொள்ளலாம்.

## கல்வித்திணைக்களம் தீவிரம்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்து பல்வேறு பகுதிகளிலும் தற்காலிகமான கொட்டகைகளில் இயங்கிவருகின்ற பாடசாலைகளை திருத்தியமைக்கும் வேலைகளில் யாழ் கல்வி வலயங்கள் அக்கறைகாட்ட ஆரம்பித்துள்ளன.

இதன் முதற்கட்டமாக தற்காலிகமான ஓலைகொட்டகைகளில் இயங்கிவருகின்ற பாடசாலைகளுக்கு அண்மையில் கொழும்பில் இருந்து எடுத்து வரப்பட்ட கூரைத்தகடுகள் போட்டுக் கொடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் அடுத்தகட்ட நடவடிக்கையாக இப் பாடசாலைகளுக்கு கொழும்பில் இருந்து சீமெந்து எடுத்து வரப்பட்டு நிலத்திற்கு போட்டுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக தெரியவருகின்றது மழைக்காலம் மிக அண்மித்து வருவதால் இவ்வாறான அடிப்படைவசதிகளை இடம்பெயர்ந்து தற்காலிகமாக ஓலைக் கொட்டகைகளில் இயங்கும் பாடசாலைகளுக்கு செய்து கொடுக்காதுவிட்டால் அப் பாடசாலைகள் பெரிதும் பாதிக்கப்படும் என்பதில் ஐயமில்லை.

அத்துடன் ஓலை மூலமாக அடிக்கடி புனரமைப்புச் செய்வது பெரும் செலவீனம் எனவே நிரந்தரமான ஒரே செலவீனத்தின் மூலமாக இவற்றை புனரமைப்புச் செய்வது பயனுள்ளது என தெரிவிக்கப்பட்டது.

நிலைமை சுமுகமாக திரும்பி பாடசாலைகள் தமதுசொந்த இடங்களுக்கு செல்லும்பட்சத்தில் கூரைத்தகடுகள் போன்ற பொருள்களை தமது பழைய பாடசாலை அமைந்துள்ள பகுதிக்கு கொண்டு சென்று பயனுடையதாக்கிக் கொள்ளலாம் எனவும் கருத்துத் தெரிவிக்கப்படுகின்றது. (பா)

## அரசியலமைப்புசீர்திருத்தம்
## ஈ.பி.டி.பி. ஆலோசனை

(கொழும்பு)

அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் தொடர்பாக பாராளுமன்றத்தில் அங்கம்வகிக்கும் கட்சிகளின் தலைவர்களின் கூட்டம் கடந்த புதனன்று பாராளுமன்றத்தில் இடம்பெற்றது.

இக் கூட்டத்தில் அரசியலமைப்பிற்கு செய்ய வேண்டிய திருத்தங்கள் தொடர்பாக ஈ.பி.டி.பி. யோசனைகளை சமர்ப்பித்தது. அந்த யோசனைகளின் முக்கிய அம்சங்கள் வருமாறு: தற்போதுள்ளது போல நாட்டின் ஒவ்வொரு வாக்காளராலும் தெரிவு செய்யப்படும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி, தமிழ் பேசும் மக்களிலிருந்து ஒரு உப ஜனாதிபதியை நியமிப்பதற்கான ஏற்பாடு இருவரும் பாராளுமன்றத்திற்கு பதில் சொல்லக் கூடியவர்களாக இருக்க வேண்டும் ஜனாதிபதிக்கான சட்ட விதிவிலக்கு இல்லாது ஒழிக்கப்படவேண்டும். பாராளுமன்றம் மேல் சபை, கீழ் சபை என இரு சபைகளை கொண்டதாக இருக்க வேண்டும். வடக்கு, கிழக்கு மாகாணங்களை ஒரே நிர்வாகப் பிரிவாகக் கொண்ட சமஷ்டி அடிப்படையிலான அரசாங்கம் அமைய வேண்டும், இலங்கையின் உத்தியோக மொழியாக சிங்களமும் தமிழும் அங்கீகரிக்கப்பட வேண்டும் சகல மதங்களுக்கும் சமவுரிமை வழங்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(யாழ்ப்பாணம்)

குறுக்கும் நெடுக்குமாக வந்த மோட்டார் சைக்கிளும் சைக்கிளும் மோதிக் கொண்டதில் சைக்கிளில் வந்த இளைஞர் காயம் அடைந்தார். நேற்று முன்தினம் பிற்பகல் யாழ் நகரின் மத்தியில் வைரவர் கோவிலுக்கு அருகில் இடம்பெற்ற இவ் விபத்தில் பிரஸ்தாப சைக்கிள் பலத்தசேதம் அடைந்தது தமிழீழ காவல்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டனர். (22)

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்
### 18.9.1994
### ஞாயிறு இரவு

08 01- தியாகதீபம் லெப்ரினன்ட் கேணல் திலீபன் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி ஞானரதன் எழுதிய- ''திலீபன்''
08 20- திலீபன் நினைவாக பாடல்கள்
08 30- செய்திகள்
08 40- தொடர் நாடகம் -பொன். கணேசமூர்த்தி எழுதும் இலங்கை மண் -40 ம் அங்கம்

### 19.9.1994
### திங்கள் காலை

07 02- மாவீரவணக்கம்
07 15- நீங்கள் கேட்டவை
07 30- செய்திகள்
07 35- பத்திரிகைச் செய்திகள்
07 40- தியாகதீபம் லெப்ரினன்ட் கேணல் திலீபன் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி- இயல்வாணன் எழுதிய ''உன்னதமானவொன்றின் பதிவுகளை மீட்டல்''

சந்நிதி (நாடகம்), கும்மி என்பனவும். கோப்பாய் வட்டத்தில் கவியரங்கு, விடிவிற்காய் விரைந்தவர்கள் (நாடகம்), காவடி என்பனவும், நல்லூர்/யாழ் வட்டத்தில் கவியரங்கு, பேச்சு, சிறை (நாடகம்), கும்மி, கரகம் என்பனவும், தீவகக் கோட்டத்தில்

...ட்டம், புலரும்பொழுது (நாடகம்), கொடிகாமம் வட்டத்தில் பேச்சு, வயலின் இசை, தமிழ்த்தாய் (நாடகம்), கோலாட்டம் என்பனவும், பளை வட்டத்தில் பேச்சு, தரும உபதேசம், தாகம் (நாடகங்கள்), கும்மி என்பனவும் நடைபெறும்.

## இரு வீதி விபத்துகளில் ஐவர் படுகாயம்

யாழ் நகரில் நேற்று நடைபெற்ற இரு வேறு விபத்துக்களில் ஐவர் படுகாயமடைந்தனர்.

கொழும்பு செல்வதற்காக ஆட்டோமூலம் கிளாலிக்கு சென்றுகொண்டிருந்தவேளை வேம்படி சந்தியில் மோட்டார் சைக்கிளுடன் ஆட்டோ மோதியதில் ஆட்டோ குடைசாய்ந்தது. இதன்போது இதில் பயணம் செய்தவர்களான மானிப்பாயைச் சேர்ந்த இராஜரட்ணம் மகேஸ்வரி (வயது 64) என்பவரது கை முறிவடைந்தது. அவரது மகனான இ. சிறீநாதன் (வயது 38) என்பவரும் ஆட்டோ சாரதியான பருத்தித்துறையை சேர்ந்த இ. உதயராசா ஆகியோரும் படுகாயமடைந்தனர். மோட்டார் சைக்கிளில் வந்தவரான சூரியராசாவும் காயமடைந்தார். இதேவேளை ஆட்டோவில் வந்தவர்களில் இரு குழந்தைகள் காயமெதுவுமின்றி தப்பிக்கொண்டனர். இவ் விபத்து நேற்று நண்பகல் 2.30 மணியளவில் நடந்தது.

மற்ற விபத்து நேற்றுக் காலை அடைக்கலமாதா தேவாலயத்திற்கு முன்பு நடைபெற்றது. இதன்போது லொறியுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் மோட்டார்சைக்கிளில் வந்தவரான சாவகச்சேரியை சேர்ந்த இலங்கரட்ணம் என்பவர் படுகாயமடைந்தார். (சி) (22)

### தமிழருக்கு

திதுவமனை மூடப்பட வேண்டிய சூழல் ஒன்று எழுந்த போதும். அதை மூடிவிடாது தொடர்ச்சியாக இயக்கவேண்டும் என்பதில் உறுதியுடனிருந்து அதில் வெற்றியும் கண்டார்.

66வயது கடந்துவிட்ட நிலையிலும் சேவை மூப்படைந்த போதும் தனது நோயையும் பொருட்படுத்தாது அவர் செய்த மருத்துவப் பணியை இந்த மண் எந்நாளும் மறக்க மாட்டாது.

வைத்திய கலாநிதி பொன்னம்பலம் அவர்களின் பிரிவை எண்ணித் துயருறும் அவரது குடும்பத்தின் வேதனையில், எமது மக்களுடன் நாமும் பங்கு கொள்கின்றோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பட்டதாரி

எடுத்துக்கூறினர் பட்டதாரி ஆசிரியர் ஒருவருக்கு வழங்கப்படும் மாதாந்த சம்பளத்தை விட பயிலுனர் பட்டதாரிக்கு குறைவாகவே கிடைப்பதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினார்

### பயிற்சி வகுப்புகள்

யாழ் மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர்கள் சங்கம் வருடா வருடம் புதிய மத்தியஸ்தர்களைத் தெரிவு செய்வதற்காக நடாத்தும் பயிற்சி வகுப்புக்கள் இன்று காலை 10.00 மணி முதல். பிரதி ஞாயிறுதோறும் யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

# தனது வாழ்வின் இறுதிக்காலம்வரை தாய் மண்ணிலே சேவை செய்தவர்

## டாக்டர் பொன்னம்பலத்திற்கு தாதிகள் சங்கம் இரங்கல்

வைத்திய உலகிலே முன்னோடியாகத் திகழ்ந்து தாய் மண்ணிலேயே தனது இறுதிக் காலம் வரை சேவையாற்றி இறைபதம் எய்திய சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி திரு எஸ். பொன்னம்பலம் அவர்களின் மறைவையிட்டு பொது வைத்திய தாதிகள் சங்கம் ஆழ்ந்த கவலையடைகிறது.

இன்றைய இக்கட்டான சூழ்நிலையிலே வேறு இடங்களுக்கு செல்ல எத்தனையோ வசதிகள் இருந்தும் அவற்றையெல்லாம் தூக்கி வீசிவிட்டு தான் பிறந்த மண்ணுக்கு சேவையாற்ற வேண்டும் என்ற அரிய நோக்கோடு தனது உடல் நிலையையும் பொருட்படுத்தாது இறுதிக் காலம் வரை தமிழ் மக்களுக்கு சேவையாற்றிய பெரும் சேவையாளர் என பொது வைத்திய தாதிகள் சங்கம் தன் இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளது.

அச் செய்தியில் மேலும்; முக்கியமாக அன்னிய நாட்டு படைகள் எம் மண்ணை ஆக்கிரமித்திருந்த வேளை யாழ் போதனா வைத்தியசாலையில் நடந்த கொடூரங்கள் எம் அனைவருக்கும் தெரியும். அந்த அனர்த்தங்கள் மத்தியிலும் தனது துணிவாலும், சேவைமனப்பான்மையினாலும் அங்கு அகப்பட்டிருந்த ஏனைய ஊழியர்களுக்கு மனத் தைரியத்தை ஊட்டி வைத்தியசாலையை மீண்டும் இயங்க வைத்த பெருமை இத் தலைவனுக்கே உரியதாகும். இவ் வேளையில் தனது குடும்பத்தினர் எங்கு இருக்கிறார்கள் என்று தெரியாத நிலையிலும் தனது குடும்பம் என்ற குறுகிய வட்டத்துக்குள் மட்டும் நின்றுவிடாது காயப்பட்ட எமது மக்களுக்கு சளைக்காது தொடர்ந்து சேவையாற்றிக் கொண்டிருந்தார். சுமார் 15 நாட்களின் பின்னர்தான் தனது குடும்பத்தினரை இவர் சந்தித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்னாரின் இழப்பினால் துயருறும் குடும்பத்தார்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கிறோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## டாக்டர் பொன்னம்பலம் நினைவஞ்சலி கூட்டம்

யாழ் அரசினர் பொது வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை நிபுணராக கடமை புரிந்து, நேற்று முன்தினம் கொழும்பில் காலமான வைத்திய கலாநிதி சரவணமுத்து பொன்னம்பலம் அவர்களின் நினைவஞ்சலிக் கூட்டம் இன்று காலை 11 மணிக்கு வைத்தியசாலையின் விரிவுரை மண்டபத்தில் டாக்டர் ஆர். ராஜேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது:

இந்த நிகழ்வில், சத்திர சிகிச்சை நிபுணர் ம். கணேசரட்ணம்- டாக்டர் எஸ். பி ஆர். சீர்மாறன். டாக்டர் எஸ். ஜெயமனோகரன் மற்றும் ஊழியர்களும் அஞ்சலி உரையாற்றுவார்கள்.

### ரோந்து

...ந்த சிறிலங்கா இராணுவத்தினர்மீது விடுதலைப் புலிகளால் இத் தாக்குதல் நடத்தப்பட்டது இதன்போது புலிகள் தரப்பில் சேதம் எதுவும் இல்லை.

- ★ ரி 56-1ரக துப்பாக்கி - 02
- ★ ரவைக்கூடுகள் - 08
- ★ கோள்சர் - 02
- ★ ஜே ஆர். கைக்குண்டு - 02
- ★ நடுத்தர ரவைகள் - 235

என்பன புலிகளால் கைப்பற்றப்பட்டன.

### ...நவம்.

...தல் மூன்றாவது ஜனாதிபதி தேர்தல் என்பது குறிப்பிடத்தக்கது. 1982 இலும், 1988 இலும் முன்னர் ஜனாதிபதி தேர்தல்கள் நடைபெற்றன.

### நிறைவு விழா

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஆதரவில் விழிப்புலவிலுவிழந்தோர் வாழ்வகத்தின் ஆறாம் ஆண்டு சேவைக் கால நிறைவு விழா இன்று யா/இராமநாதன் கல்லூரியில் காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் விழிப்புல வலுவிழந்தோரின் செயல்முறைக் கண்காட்சியும் அவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வில் தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் முக்கிய பிரதிநிதிகளும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்

### லண்டன்

ஆராய்வதற்கே இம் மாநாடு லண்டனில்நடைபெறுகின்றது


இம் மாநாடு லண்டனில் நேற்றும் இன்றும் நடைபெற ஏற்பாடாகியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (பா, தி)

## 'விடுதலைப் புலிகள்' ஏடு நாளை வெளிவருகின்றது

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' இதழின் புரட்டாதி மாத ஏடு நாளை வெளிவருகின்றது. ''சந்திரிகாவின் ஆட்சியில் சமாதானம் ஏற்படுமா?'' என்ற தலைப்புச் செய்தியுடன் வெளிவரும் இவ் இதழில், 'சந்திரிகா அரசு; புதிய நம்பிக்கை' என்ற நிலைப்பாட்டு விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

மேலும், ''சிறிலங்கா வான் படையின் பலம்'' என்ற தகவல் கட்டுரை, ''ஓராண்டு நிறைவில் தமிழீழ நீதிமன்று'' என்ற விளக்கக் கட்டுரை, ''கதவுகள் திறக்கும்; காவலரண்கள் கை குலுக்கும்; பேசலாம் வருக'' என்ற கவியுரை, ''ஜொனி' மிதி வெடிகள்'' என்ற வரலாற்றுக் கட்டுரை, ''இலட்சிய உறுதியில் இரும்பு மனிதர்கள்'' என்ற பலாலித் தாக்குதலின் நினைவுக் கட்டுரை என்பவற்றுடன் மேலும் பல அம்சங்களும் இவ் இதழில் இடம்பெற்றுள்ளன.

## ஓராண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்: 09-05-1977

தாயக விடிவில்: 29-09-1993

**லெப்டினனட்**
**கார்வண்ணன் / ரகுநாத்**
(குணரத்தினம் குணராஜ்)
(வேலணை)

திதி: 18-09-1994

பாரினிலே
சுதந்திரப் பறவைகளாய்
நம் மக்கள் உலாவ நீ
போரினிலே - நீ
புலியாகப் புகுந்து
பதினாறினிலே
மாவீரனானாய் நீ
நெஞ்சினிலே
குண்டேந்தி
விழித்து விடு என்றது
உன் விடுதலையுணர்வு.
ஒரு புது உதயத்தை எதிர்பார்த்து

இவருடன் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களுக்கும் எமது அஞ்சலிகள்.

47, செங்குந்தா வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்

(9447)

## தடுப்புக் காவலில் உள்ள 800 பேர் விடுதலையாவர்

(கொழும்பு)

தகவல் வழங்கத் தவறிய குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டு தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மற்றும் அக் குற்றத்தை நீதிமன்றத்தில் ஏற்று சிறைச்சாலைகளில் இருப்போரை விரைவில் விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

'பயங்கரவாத நடவடிக்கை' தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள சுமார் எண்ணூறுக்கு மேற்பட்டவர்களில் மூன்றில் இரண்டு பகுதியினர் அடுத்த சில தினங்களில் விடுதலை செய்யப்பட இருப்பதாக அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

சட்டவிரோதமான முறையில் கைது செய்யப்பட்ட மற்றும் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை விடுதலைசெய்வதற்காக புதிய அரசாங்கம் மேற்கொள்ளும் ஒரு முயற்சியாக இது அமைவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

### யாழ்.

செய்த சமயம் விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்தே இம் மருத்துவ உபகரணங்கள் கிடைக்கவுள்ளன.

இப் பொருட்கள் யாழ். அரச அதிபரின் ஊடாக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளதாக தெரிய வருகின்றது. (பா) (தி)

### எரிந்து நாசம்

புத்தளம் நகரில் கடந்த புதனன்றுயாழ்ப்பாணத்தைச் சேர்ந்த முஸ்லிம் ஒருவருக்கு சொந்தமான நகைக் கடை ஒன்று எரிந்து சாம்பரானது. சுமார் 5 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்: 01-06-1973

தாயக விடிவில்: 18-09-1993

**வீரவேங்கை நவநீதன்**
(விஜயராஜா விஜயமோகனராஜா)
[உருத்திரபுரம், கிளிநொச்சி]

உருத்திர புரத்தில் உதித்தவன் - தமிழை
வருத்திடும் தளையறுத்திட விழித்தவன்
வரிப்புலியாகி களத்தினில் கனன்றவன் - தமிழீழ
மருத்துவன் ஆகிடுமுன் மாவீரனாகினான்.

உதிரம் கொடுத்து இவன்தொடுத்த பணியில்
சரிதம் படைக்க இவன்தொடர்ந்த சுவடில்
வீறாய் விரையும் புலிகள் படையால்
விரைவாய் விடியும் தமிழீழ தேசம்.

18-09-1993 அன்று மாத்தளான் கிராமத்தில் நடத்தப்பட்ட விமானத் தாக்குதலில் இவருடன் வீரச்சாவடைந்த மேஜர் மூர்த்தி மாஸ்ரர், 2-ம் லெப்.

## பிற் போடப்பட்டுள்ளது

### தொழில் நுட்பக் கல்லூரி மாணவர் அவை

சஞ்சிகை வெளியீட்டு நிதிக்காக 18.09.94 இல் எம்மால நடாத்தப்படவிருந்த கலை நிகழ்ச்சி தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகிறோம். கலை நிகழ்ச்சி இடம் பெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

தொழில் நுட்ப கல்லூரி
பிறவுண் வீதி
கொக்குவில்.

மாணவர் அவை

(9444)

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## தியாகி திலீபன் நினைவாக சிரமதானம்

தியாகி லெப். கேணல் திலீபனின் 7-ம் ஆண்டை நினைவு கொள்ளும் வகையிலாக விடுதலைப்புலிகள் மாணவரமைப்பால் நேற்று முன்தினம் யாழ் போதனா வைத்திய சாலையின் ஒரு பகுதி சிரமதானம் செய்யப்பட்டது இதில் யாழ்

## திங்கள் முதல் (19-09 1994)

பிறவுண் வீதி
கொக்குவில்.

(9444)

திங்கள் முதல் (19-09 1994)

உங்கள் கைகளில் தவழ இருக்கின்றது

வாங்கிப் படிக்கத் தயாராகுங்கள்

வள்ளுவம்

இது மாதமொரு இதழ் ஆகும்

இதழின் விலை 2 ரூபா 50 சதம் மட்டுமே

(சி-10358)

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்
(வ - து) சுன்னாகம்

## அரிசியாலை இயந்திரம் விற்பனை அறிவித்தல்

சுன்னாகம் பல நோ. கூ: சங்கத்தில் இருக்கும் கீழ்க் குறிப்பிட்ட, அரிசியாலைக்கான புதிய இயந்திரமும், உப உறுப்புக்களும் கேள்விப்பத்திரம் மூலம் விற்பனைக்கு இருக்கின்றன.

1] சைனீஸ் ஹல்லர் CHINESE HULLER COMPLETE SET
2] பெல்ட். அளவு 6"X5" - BELT

கேள்விப் பத்திரங்களை சங்க வேலை நாட்களில், சங்கத்தில் பெற்று. இயந்திரத்தையும், உப உறுப்புக்களையும் பார்வையிட்டுக் கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்கள் 30-9-94 வரை ஏற்றுக்கொள்ளப்படும்

பொதுமுகாமையாளர்

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்,
சுன்னாகம்,
15-09-94

(சி-10363

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994-ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது



## மேஜர் குமரன்
(மணியம் சிறிசிவநாதன்)

தாயின் மழலையாக 03-05-1969

வீரமண்ணில் மாவீரனாக 29-09-1993

புலோப்பளை மண்ணிலே பூகம்பம் வெடித்தது அன்று
தமிழ் அன்னைதுயர் துடைக்க களம் சென்றான் குமரன்
காவிய நாயகனே உன் உடலை புலோப்பளை மண்
தனதாக்கிக் கொண்டது
ஆனாலும் உன் இலட்சியம் வென்றது உன் வரலாறு
நாளை
இம் மண்ணில் பொறிக்கப்படும்.

18-09-1994 ஞாயிற்றுக்கிழமை இன்று எமதில்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் சகபோராளிகள், உற்றார், உறவினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தந்தை, சகோதரர்கள்,
சகோதரி.

861, ஆசாத் வீதி
ஐந்து சந்தி,
யாழ்ப்பாணம்,

(இ)

தியாகி லெப். கேணல் திலீபனின் 7-ம் ஆண்டை நினைவு கொள்ளும் வகையிலாக விடுதலைப்புலிகள் மாணவரமைப்பால் நேற்று முன்தினம் யாழ் போதனா வைத்திய சாலையின் ஒரு பகுதி சிரமதானம் செய்யப்பட்டது இதில் யாழ் பெரிய புலம் ம. ம. வித்தியாலயம், யா- இந்துக் கல்லூரி, யா-கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயங்களைச் சேர்ந்த சுமார் 50 வரையான மாணவர்கள் மிகவும் உற்சாகமாக கலந்து கொண்டு செயற்பட்டார்கள்.

## எக்ஸ்றே பிலிம் வந்தது
(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையின் எக்ஸ்றே பிரிவிற்கு ஒரு தொகுதி எக்ஸ்றே பிலிம்கள் கொழும்பிலிருந்து எடுத்து வரப்பட்டுள்ளன.

நீண்ட நாட்களாக யாழ். போதனா வைத்தியசாலையின் எக்ஸ்றேபிரிவில் எக்ஸ்றே பிலிம்பற்றாக்குறையாக இருந்து வந்துள்ளது தற்சமயம் இவைவந்து சேர்ந்ததும் பற்றாக்குறை தவிர்க்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

(பா. தி)

## புதிய பேராயர் நியமனம்
(நல்லூர்)

இலங்கையின் புதிய திருப்பீடத் தூதுவராக பேராயர் ஒஸ்வால்டோ படில்லா திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் பாப்பரசரால் நியமனம் செய்யப்பட்டுள்ளார். முன்னர் இலங்கையில் திருப்பீடத் தூதராக கடந்த ஆறு ஆண்டுகள் கடமைபுரிந்த பேராயர் பிரான்சுவா பக்கே ஆண்டகை சன்ரா டொமிக்கோ நாட்டின் திருப்பீடத் தூதராக பாப்பரசரால் நியமிக்கப்பட்டுள்ளார். (17)

## தொண்டா

தேர்தலில் ஐ. தே. கவுக்கு ஆதரவளித்த இ. தொ. காவுக்கு ஐ. தே. க. துரோகம் இழைத்து விட்டதாக தொண்டமான் பேட்டி ஒன்றில் குற்றஞ்சாட்டியுள்ளார்.

உதிரம் கொடுத்து இவன்தொடுத்த பணியில்
சரிதம் படைக்க இவன்தொடர்ந்த சுவடில்
வீறாய் விரையும் புலிகள் படையால்
விரைவாய் விடியும் தமிழீழ தேசம்.

18-09-1993 அன்று மாத்தளான் கிராமத்தில் நடத்தப்பட்ட விமானத் தாக்குதலில் இவருடன் வீரச்சாவடைந்த மேஜர் மூர்த்தி மாஸ்ரர், 2-ம் லெப். விவேகன் ஆகியோரையும் இத் தாக்குதலில் கொல்லப்பட்ட பொதுமக்களையும் இந்நாளில் நினைவு கூருகிறோம்.

(10367) - சகபோராளிகள்

## ஓராண்டு நினைவஞ்சலி



லெப். கார்வண்ணன் / ரகுநாத்
[குணரத்தினம் குணராஜ்]
(வேலணை)

தாயின் மடியில் 09 05-1977

தாயக மீட்பில் 29-09-1993

திதி:- 18-09-1994

பாரினிலே சுதந்திரப் பறவைகளாய்
நம் மக்கள் உலாவ - நீ
போரினிலே புலியாகப் புகுந்து
பதினாறினிலே மாவீரனானாய்
நெஞ்சினிலே குண்டுதுளைத்து;
விழித்து விடு என்றது
உன் விடுதலையுணர்வு
ஒரு புது உதயத்தை எதிர்பார்த்து.

இவருடன் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களுக்கும் எமது அஞ்சலிகள்.

47, செங்குந்தா வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்

(9446)